பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 24 திங்கட்கிழமை (10-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:347

## ஓமந்தையில் சிப்பாய் மரணம்!

வவுனியா,நவ.10

வவுனியா, ஓமந்தை பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது கட்டுத்துவக்கு வெடித்ததில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் புதுகாட்டுக்குளம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 562 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த சந்திரபால என்ற சிப்பாயே உயிரிழந்தார். எனத் தெரிவிக்கப்பட்டது. கட்டுத்துவக்கு வெடித்து படுகாயமடைந்த நிலையில் உடனடியாக இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்ட போது அங்கே உயிரிழந்தார்.(ஐ-9-164)

# பொதுத் தேர்தலுக்கு அவசியமில்லை; நாடாளுமன்ற ஒத்திவைப்பு நீடிக்காது!

### ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு,நவ.10

நாட்டில் அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ள போதிலும் பொதுத் தேர்தலை நடத்தும் அவசியம் ஏற்படவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார். எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றம் மேலும் ஒத்திவைக்கப்பட மாட்டாது எனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.



'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியில் இவற்றைத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, அமெரிக்காவில் இருந்து திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தான் இன்னமும் சந்திக்கவில்லை எனவும் நேரம் கிடைத்ததும் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்படும் எனவும் கூறினார்.

செவ்வியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் பாதுகாப்பு நிலைமை சீர்கெட்டிருக்கிறது. அமைச்சரவைச் சட்டத்தின் கீழான எனது அதிகாரங்களை அவர் (14ஆம் பக்கம் பார்க்க)

## சவூதியில் இலங்கைப் பெண் காயம்!

ரியாத்,நவ.10

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் மாடிக்குடியிருப்புப் பகுதி ஒன்றின் மீது நடத்தப்பட்ட பெரும் குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் இலங்கைப் பெண் ஒருவர் அடங்கியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரைவிட இந்தச் சம்பவத்தில் இலங்கையர்கள் வேறு எவராவது பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது பற்றி அறிந்துகொள்வதற்கு முயற்சித்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்திருக்கிறது.

(முன்னர் வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்) (ஐ-9)

### அமைச்சுகளைப் பிடுங்கி அதிகாரத்தைக் கையில் எடுத்த

# ஜனாதிபதியே புலிகளுடன் பேசி சமாதானத்தைக் கொண்டு வரட்டும்!

## சர்வதேச சமூகத்துக்குப் பிரதமர் தெரிவிப்பு பத்திரிகையாளர்கள் மாநாட்டில் அறிவிப்பு





கொழும்பு,நவம்பர் 10

**இரட்டைத் தலைமைகளின் இழுபறிக்கு நடுவே சமாதான முன்னெடுப்புகளைத் தொடர முடியாது. ஆட்சி ஒரு புறமும் அதிகாரம் ஒரு புறமும் சிக்கித் தடுமாறும் போது நாட்டில் சமாதானம் என்பது கேள்விக் குறியாகிவிட்டது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பை, ஒன்றில் அரசிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும். ஜனாதிபதியிடம் அதனை ஒப்படைக்க நாம் தயார். அதற்கு ஆதரவு வழங்கவும் நாம் தயார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை அமெரிக்கத் தூதுவரையும் நோர்வேத் தூதுவரையும் அலரிமாளிகையில் சந்தித்து தனது இந்த நிலைப்பாட்டைத் தெரிவித்தார் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று கூறினார்.

ரோக்கியோ உதவும் நாடுகள் கூட்டத்திற்கு இணைத் தலைமை ஏற்ற நான்கு தரப்புகளுள் நோர்வேயும், அமெரிக்காவும் இரண்டு. இந்த இரு நாடுகளின் பிரதிநிதிகளிடமும் ஜனாதிபதியின் தற்போதைய நடவடிக்கைகளினால் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளையும் பாரதூரமான பின் விளைவுகளையும் பிரதமர் ரணில் தெளிவுபடுத்தினார். அதேவேளை, ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியிடமும் தொலைபேசி மூலம் தனது நிலைப்பாட்டைப் பிரதமர் அறிவித்து விட்டார் என்றும் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கொழும்பு கிராமோதய மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட செய்தியா (14ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட படைத்தளபதிகளுக்கு ஆலோசனை



கொழும்பு,நவ.10

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் படைத் தலைவர்களின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

நாட்டின் சட்டத்தின்படி முப்படைகளுக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி இதனைச் செய்யுமாறு அவர் படைத்தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் இந்த ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார். (14ஆம் பக்கம் பார்க்க)

### வாழைச்சேனை கிண்ணையடியில்

## கத்திக்குத்து காயங்களுடன் சிப்பாயின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு,நவ.10

வாழைச்சேனை கிண்ணையடி வீதியில் உள்ள பிரம்புக் காட்டில் புதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட படைச்சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சடலத்தின் நெஞ்சு மற்றும் முதுகுப் பகுதிகளில் கத்திக் குத்து காயங்கள் காணப்பட்டன. கும்புறுமலை படைமுகாமில் கடமையாற்றும் முதியான் சலகே விமலதாஸ என்பவரின் சட (14ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தலைவர் எனது நண்பரல்லர்; என்றாலும் அவருடன் பேசுவதற்கு தயார்

### பி.பி.ஸி. பேட்டியில் ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு,நவ.10

விடுதலைப் புலிகளின் தலைவரை நான் என்றுமே ஒரு நல்ல நண்பராகக் கருதாமல் இருக்கலாம். ஆனால், அவரது அடக்குமுறையின் கீழ்வாழும் பல லட்சக்கணக்கான தமிழ் மக்களின் நலனுக்காக அவரோடு பேசவும் செயற்படவும் தயாராக இருக்கிறேன்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க.

பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு நேற்று அளித்த செவ்வி ஒன்றிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

நான் மூன்று அமைச்சுகளின் பதவிகளைப் பறிக்கவில்லை. அவர்களிடம் இருந்த சில முக்கிய துறைகளை மட்டுமே பெற்று அவற்றை எனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறேன். அவ்வளவுதான்.

★கேள்வி: அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய நல்லிணக்க அரசு ஒன்று இலங்கையை எவ்வாறு நிர்வகிக்க முடியும்?

★ஜனாதிபதி: எவ்வளவோ தூற்றுதல்கள் இருந்தும் நான் காழ்ப்புணர்ச்சி காட்டாமல் கண்ணியமாக நடந்து கொண்டுள்ளேன்.

அமைச்சரவைக் கூட்டங்களின் (14ஆம் பக்கம் பார்க்க)



# இலங்கை உட்பட 15 நாடுகளில் சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சி!

## ஐ.நா. பொதுச் செயலாளர் அறிக்கை

நியூயோர்க்,நவ.10

இலங்கை உட்பட பதினைந்து நாடுகளில் உள்ள தீவிரவாதக் குழுக்கள் சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சியை அளித்து வருகின்றன என்று ஐநா. சபை அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

புருண்டி, கொலம்பியா, கொங்கோ, ஐவரி கோஸ்ட், லைபீரியா, மியன்மர், சூடான், உகண்டா ஆகிய நாடுகளில் உள்ள 22 புதிய குழுக்கள் சிறுவர்களை தங்கள் படையில் சேர்த்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கின்றன.

ஆப்கானிஸ்தான், நேபாளம், வடக்கு அயர்லாந்து, பிலிப்பைன்ஸ், செக் குடியரசு, சோமாலியா, இலங்கை ஆகிய 7 நாடுகளில் உள்ள தீவிரவாதிகளும் சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கின்றனர் என்று ஐ.நா. பொதுச்சபையிலும், பாதுகாப்புச் சபையிலும் பொதுச் செயலாளர் கோபி அனான் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

18 வயதுக்குட்பட்டவர்களுக்கு போர் பயிற்சி அளிக்கக்கூடாது என்று சர்வதேச அளவில் முயற்சி மேற்கொண்ட போதிலும் சிறுவர்கள், தீவிரவாதிகளால் துன்புறுத்தப்படுகின்றனர். சிறுவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து போரில் ஈடுபடுத்துவதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க ஐநா. சபையில் உறுப்பினராக இருக்கும் நாடுகள் ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## மாணவனைக் காணோம்!

யாழ்ப்பாணம்,நவ.10

மாணவன் ஒருவனைக் காணவில்லையென தெரிவித்து அவரது தந்தையால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த கணேசமூர்த்தி பிரகலாதன் வயது (16) என்ற மாணவனே காணாமற் போயுள்ளார். கடந்த 6 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் சுன்னாகம் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்துக்கு சென்ற பிரஸ்தாப மாணவன் பின்னர் வீடுதிரும்பவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-7)

# சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி திருநெல்வேலியில் நேற்று திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் 2ஆவது உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்தமாக திருநெல்வேலி சிவன் வீதியில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் கோயில் முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட சைவ அர்ச்சகர் பயிற்சிக் கல்லூரி நேற்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

அகில இலங்கை சைவக் குருக்கள் அர்ச்சகர்சபைத் தலைவர் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் வி.முருகையா ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர்.

நந்திக் கொடியேற்றல், ஆசியுரையைத் தொடர்ந்து வாழ்த்துரைகளை இந்து சமய கலாசார அலுவல்கள், திணைக்கள யாழ்.மாவட்ட உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் ஆகியோர் நிகழ்த்தினர்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, நல்லூர் பிரதேச சபை செயலாளர் செ.செல்வரட்ணம் மற்றும் பசு, இடபங்களின் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த சு.கங்கைவேணியன் உட்பட சைவக்குருமார், இந்து அபிமானிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-5)

# நோர்வே சமாதானக் குழுவினர் திட்டமிட்டபடி இன்று வருகை

## சமாதான முயற்சியை முன்நகர்த்துவது பற்றி ஆராய்வர்

கொழும்பு,நவ.10

இலங்கை அரசியலில் திடீர்மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்ற போதிலும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசனும் விசேட சமாதான அனுசரணையாளர் எரிக்சொல்ஹெய்மும் திட்டமிட்டவாறு இன்று இலங்கைக்கு வருகின்றனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட இங்கு வரும் இவர்கள், கொழும்பிலும் கிளிநொச்சியிலும் பல சந்திப்புக்களை மேற்கொள்வர் என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நோர்வே குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திப்பார்களா என்பது இன்று தெரியவரலாம்.

சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்நகர்த்துவது என்பதை ஆராயும் நோர்வே குழுவினர், இலங்கையில் நாளை மறுதினம் வரை தங்கியிருப்பர் எனத் தெரிகிறது.

இதற்கிடையே, இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து நோர்வே அவ்வப்போது விடுதலைப் புலிகளின் தலைமைக்கு விளக்கி வருகின்றது என்று விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

# சிறுவர்கள், முதியோருக்கு படையினர் மதிய உணவு

யாழ்ப்பாணம்,நவ.10

நெல்லியடி சிறுவர் இல்லத்தில் தங்கியிருக்கும் சிறுவர்களுக்கு படையினர் மதிய உணவு வழங்கினர்.

வரணி வடக்கில் அமைந்துள்ள 52 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியின் வழிகாட்டலுக்கு அமைய 521, 522 மற்றும் 524 ஆவது படையணிகளின் ஒத்துழைப்புடன் பூரணைதினமான கடந்த வெள்ளியன்று நெல்லியடி சிறுவர் இல்லத்தில் தங்கியிருக்கும் 60 சிறுவர்களுக்கும் 40 முதியவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது என்றும் -

522 ஆவது படையணிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 220 முதியவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டதாகவும் பலாலி படைத்தலைமையகம் அறிவித்திருக்கிறது.

524 ஆவது படையணிக்குட்பட்ட கற்கோவளம் கிராமத்தில் வசிக்கும் 200 வறிய குடும்பங்களுக்கு சுமார் ஆயிரம் கிலோ எடையுடைய உணவுப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பண்ணாகத்தில் வெள்ளியன்று வீடு புகுந்து துணிகரத் திருட்டு

பட்டப்பகலில் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

பண்ணாகம் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் இந்த துணிகரத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சங்கிலி, நெக்லஸ் மற்றும் தோடுகள் போன்ற தங்க நகைகளே இவ்வாறு திருட்டுப் போயுள்ளன.

வீட்டுக்காரர்கள் சென்றிருந்த சமயம் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்று கூறப்பட்டது.

வெளியில் சென்றிருந்த வீட்டுக்காரர்கள் மீண்டும் திரும்பி வந்து பார்த்த போது திருட்டுக் குறித்து தெரியவந்தது. இது குறித்து வட்டுக்கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. பொலீஸார் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-4-28)

# பிரதமரின் தீர்வு முயற்சிகளுக்கு வடக்கு-கிழக்கு சங்கங்கள் ஆதரவு

திருகோணமலை,நவ.10

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு பல சங்கங்கள் பூரண ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடக்குக் கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சம்மேளனம், வடக்கு - கிழக்கு மாகாண எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்த சங்கங்கள், வடக்கு-கிழக்கு மாகாண பொது ஊழியர் சங்கம், வடக்கு-கிழக்கு மாகாணத் தொழில் நுட்பவியல் சேவை உத்தியோகத்தர் சங்கம், வடக்கு-கிழக்கு மாகாண கால்நடை போதனாசிரியர் சங்கம் என்பன இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தங்களின் ஆதரவை தெரிவித்துள்ளன.

மிகவும் முக்கியமானதொரு காலகட்டத்தில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி மூன்று முன்னைய அமைச்சர்களின் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றமைக்கு பலத்த க்ண்டனமும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தென்னிலங்கையில உள்ள சகோதர தொழிற் சங்கங்களும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களுடன் தொடர்புகொள்ளப்போவதாகவும் இச்சங்கங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளன.

## சேவை நலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,நவ.10

வலி.கிழக்கு பிரதேச சபையில் 6 வருடங்கள் செயலாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற செ.குகதாஸனின் சேவை நலன் பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி. கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# நாடாளுமன்றை மீண்டும் கூட்டுவது குறித்து சபாநாயகர் இன்று கூட்டம்

## பொ.ஐ.மு, ஜே.வி.பி, நு.ஆ கலந்துகொள்ளா

கொழும்பு,நவ.10

நாடாளுமன்றத்தை மீண்டும் உடனடியாகக் கூட்டுவது குறித்து ஆராய கட்சித்தலைவர்களின் கூட்டத்தை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா இன்று கூட்டியிருக்கிறார்.

அரசுக் கட்சியின் பிரதம கொறடாவான மஹிந்த சமரசிங்க விடுத்த கோரிக்கையின் பேரிலேயே இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

ஐதேமுன்னணியைச் சேர்ந்த கட்சிகளும் இ.தொ.க, ம.ம.மு, ஈ.பி.டி.பி, புளொட், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ) ஆகியன இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளன.

சபாநாயகர் கட்சித்தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டுவது அரசியலமைப்புக்கு முரணானது எனத் தெரிவித்து ஜே.வி.பி சபாநாயகருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

முக்கிய எதிர்க்கட்சிகள் கூட்டத்துக்கு வராத நிலையில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவுகள் எதனையும் எடுக்க முடியுமா? என்று சபாநாயகரிடம் கேட்டபோது இது குறித்து ஆராய்ந்து வருகிறேன் என்று சபாநாயகர் தெரிவித்தார்.

### ஹக்கீம் கருத்து

கொழும்பு,நவ.10

தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைப்பது தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தது போல் முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் கட்சியின் அரசியல் அதி உயர் பீடம் அது குறித்து கூடி ஆராய்ந்து தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்.

இவ்வாறு மு.கா. தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (ஐ)

# சவூதியில் நடந்த குண்டுவெடிப்பில் இலங்கையருக்குப் பாதிப்பில்லை

சவூதி அரேபியாவில் சனி நள்ளிரவு இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் இலங்கையர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியா, ரியாத் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் நூற்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இலங்கையர் எவரும் பாதிக்கப்பட்டனரா என்பது குறித்து தமக்கு இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனவும் வெளிநாட்டு வேலைப்பணியகம் தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று குண்டு வெடிப்பு இடம்பெற்ற பகுதிக்குச் சென்று விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதாகவும், இலங்கையர் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் கிடைக்கவில்லை எனவும் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் அன்சார் தகவல் தெரிவித்திருக்கிறார் எனவும் கூறப்பட்டது.

## அளவெட்டியில் கணனி பயிற்சி

வலிகாமம்தெற்கு,நவ.10

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினரால் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட நூல் நிலையக் கட்டடத்தில் கணனி பயிற்சிகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்நிலையம் யாழ்.போருட் நிறுவன திட்ட முகாமையாளர் செல்வி எய்ரின் ரொட்சித் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இன்று ஆரம்பமாக உள்ள கணனி பயிற்சி வகுப்பில் ஆறுவயது நிரம்பிய பிள்ளைகள் உட்பட 26பேர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-152)



இரண்டாவது உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்தமாக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் அமைக்கப்பட்ட 'சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரி' கட்டடத் திறப்புவிழா நேற்று திருநெல்வேலி அம்மன் கோயிலுக்கு அருகில் நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்ட இந்து மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களையும் திறந்துவைக்கப்பட்ட குருமார் பயிற்சிக் கல்லூரிக் கட்டடத்தின் முகப்புத் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

(படம்:அலுவலக படப்பிடிப்பாளர்)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# சவூதியில் தற்கொலைத் தாக்குதல்! 30பேர் உடல் சிதறிப் பலியாகினர்!!

ரியாத்,நவ.10

சவூதி அரேபியாவில் நேற்று சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் முப்பது பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கூறியுள்ளன. குண்டுகள் நிரப்பிய காரில் வந்த 5 தற்கொலைத் தீவிரவாதிகளே மேற்படி தாக்குதலை நடத்தினர். தாக்குதல் நடந்த இடத்தில் அமைந்திருந்த அடுக்கு மாடிக் குடியிருப்பு தரை மட்டமானது.


குண்டுவெடிப்பு நடந்த இடம்.

ரியாத், ஜெட்டா, டெஹ்ரான் ஆகிய நகரங்களில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் நேற்றுமுன்தினம் திடீரென மூடப்பட்டன. இந்நிலையிலேயே மேற்படி தாக்குதல் அங்கு நடந்தது. தலைநகர் ரியாத்தின் மேற்குப் பகுதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியிலேயே மேற்படி குண்டுத்தாக்குதல் நடந்தது.

அமெரிக்கப்படையினர் இந்தக் குடியிருப்புப்பகுதியில் முன்னர் தமது இராணுவத் தளத்தை அமைத்திருந்தனர்.

நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் காரொன்றில் வந்த ஐந்து தீவிரவாதிகள் குடியிருப்புப் பகுதிக்குள் ஊடுருவினர். தீவிரவாதிகளுக்கும் குடியிருப்புப் பாதுகாவலர்களுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. காவலர்களை சுட்டு வீழ்த்திய தற்கொலைத் தீவிரவாதிகள் காருடன் உள்ளே புகுந்தனர்.

குண்டுகள் நிரப்பப்பட்ட அந்தக்கார் குடியிருப்புக் கட்டடத்துடன் மோதியது. இதனால், கார் வெடித்துச்சிதறியது. அடுக்கு மாடிக் குடியிருப்பு இடிந்து தரைமட்டமாகியது. தீயும் திடீரெனப் பற்றிக்கொண்டது. இதனால் அங்கு நின்ற கார்கள் அனைத்தும் தீப்பற்றி வெடித்துச் சிதறின.

இந்தச் சம்பவத்தில் முப்பது பேர் கொல்லப்பட்டனர் என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன. எனினும் உயிரிழப்புகள் அதிகமாகலாம் என்று செய்திகள் கூறுகின்றன. கொல்லப்பட்டவர்களில் ஐந்து பேர் இந்தியர்களாவர். மூவர் லெபனானைச் சேர்ந்தவர்கள். மேலும் பல வெளிநாட்டவர்களும் இச்சம்பவத்தில் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.


சிதிலங்களிடையே சடலங்களைத் தேடுவோர். AP

இடிபாடுகளை அகற்றும் பணியில் நூற்றுக்கணக்கான மீட்புப்பணியாளர்களும் தீயணைப்புப் படையினரும் ஈடுபட்டுள்ளனர். குடியிருப்புப் பகுதி முழுவதும் தீ பற்றி எரிவதை அல்-அரேபியா தொலைக்காட்சி நேரில் ஒளிபரப்பியது.

குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதும் அந்த இடத்தை பொலீஸார் சுற்றிவளைத்தனர். அங்கு செல்ல பொதுமக்கள் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் நடைபெறுகிறது.

குண்டுத் தாக்குதலினால் ஒருவளாகம் முழுவதும் இடிந்து அழிந்துவிட்டது என்று சவூதி அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், ரியாத்தில் உள்ள மேற்குலகினர் தங்கும் மூன்று விடுதிகளே குறிவைக்கப்பட்டன என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கூறியுள்ளது.

# தமிழக அரசின் அதிரடி நடவடிக்கையை எதிர்த்து 'இந்து' பத்திரிகை உயர் நீதிமன்றில் வழக்கு

## தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டோர் தலைமறைவு

புதுடில்லி,நவ.10

தமிழக சட்டமன்றின் உரிமையை மீறினார்கள் என்ற குற்றத்திற்காக 'இந்து' பத்திரிகை ஆசிரியர், 'முரசொலி' பத்திரிகை ஆசிரியர் மற்றும் நால்வருக்கு பதினைந்து நாள் சிறைத் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதை எதிர்த்து 'இந்து' பத்திரிகையாளர்கள் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி ஆறு பேருக்கும் சிறைத் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்ட போதும், அவர்கள் இன்னமும் கைதாகவில்லை. அவர்களைத் தேடி தமிழகப் பொலீஸார் வலைவிரித்துள்ளனர். ஆனால் அவர்கள் தலை மறைவாகியுள்ளனர்.

உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில்:-

"தமிழக சட்டசபை பதினைந்து நாள் சிறைத்தண்டனை விதித்ததை செல்லாது என்று அறிவிக்கவேண்டும். அதற்கு முன் 'இந்து' பத்திரிகையாளர்களை கைதுசெய்ய வழங்கப்பட்டுள்ள உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்கவேண்டும்" - என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுமீதான விசாரணை இன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து 'இந்து' பத்திரிகையின் தலைமை ஆசிரியர் என்ராம் கூறுகையில் -

"பத்திரிகையாளர்களுக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை வாபஸ் பெறுமாறு தமிழக அரசைக் கோரமாட்டோம். ஆனால், உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளோம். இதனால், எங்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

தமிழக சட்டமன்றம் எடுத்த முடிவு சட்டத்திற்குப் புறம்பானது. ஜனநாயக விரோதமானது.

இப்பிரச்சினைக்காக எந்த அரசையும் நாங்கள் நாடமாட்டோம். ஜெயலலிதாவின் அரசைக் கலைக்கும் படியும் கோரமாட்டோம். ஆனால், நீதிமன்றம் மூலமே தீர்வுகாண்போம்.

டான்சி வழக்கில் ஜெயலலிதாவுக்கு தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. அப்போதுதான் அவர் பதவியில் நீடிப்பாரா என்பது தெரியவரும். அந்த நேரம் நெருக்கிக்கொண்டிருக்கிறது. அது நடக்கும் என நான் நம்புகிறேன்" - என்றார்.

இதற்கிடையே, ராம் சென்ற காரை தமிழகப் பொலீஸார் நேற்றுமுன்தினம் மறித்துச் சோதனையிட்டனர். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பத்திரிகையாளர்கள் மீது சிறைத் தண்டனை விதிக்கப்பபட்டுள்ளமை, காரை மறித்துச் சோதனையிட்டமை குறித்து ராம், பிரதமர் வாஜ்பாயுடனும், துணைப் பிரதமர் அத்வானியுடனும் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

தமிழக அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து அங்கு ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நடைபெறுகின்றன. ஜெயலலிதாவின் கொடும்பாவிகளும் எரிக்கப்படுகின்றன.

பிரதமர் வாஜ்பாயையும், துணைப் பிரதமர் அத்வானியையும் சந்தித்து இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுக்கும்படி கோருவதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் புதுடில்லிக்குச் சென்றுள்ளனர்.

# ஜோர்ஜிய நாடாளுமன்றத் தேர்தல் வாக்கு எண்ணும் பணி நிறுத்தம்

ஜோர்ஜிய நாடாளுமன்றத் தேர்தல் வாக்குகள் எண்ணும் பணி திடீரென நிறுத்தப்பட்டது. அரசுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதையடுத்தே, தேர்தல் ஆணையாளர் மேற்படி முடிவை எடுத்திருக்கிறார்.

தேர்தலில் மோசடி நடைபெற்றதாக எதிர்க்கட்சிகள் முறையிட்டுள்ளன. அங்கு தொடர்ந்து நான்காவது நாளாக ஆர்ப்பாட்டம் நடந்துவருகிறது.

தேர்தல் முடிவுகள் வெளியாகும் பட்சத்தில் அது அரசுக்கு சாதகமாக அமையும் போது - அங்கு கலவரங்கள் வெடிக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

இதனால் தேர்தல் முடிவை உடனடியாக வெளியிடுவது நல்லதல்ல என்று உலக நாடுகள் கூறியிருந்த நிலையில், வாக்குகள் எண்ணும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

'ஏராளம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளை நீதிபதிகள் விசாரணை செய்து அவற்றின் முடிவுகளை வெளியிடும் வரை, வாக்குகள் எண்ணும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது' - என்று தேர்தல் ஆணையாளர் நானாதேவ் தரியானி தெரிவித்துள்ளார்.

பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் திரண்டு நேற்று தலைநகர் ரிப்ளிஸியில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். 1991இல் அங்கு நடந்த உள்நாட்டு போரின் பின்னர், இவ்வாறான மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் நடந்ததில்லை என்று கூறப்படுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குச் செல்லும் வீதியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர். இதனால் ஜனாதிபதி, மாளிகைக்குள்ளேயே முடங்கியுள்ளார்.

மோசடி செய்ததை ஒப்புக்கொண்டு, ஜனாதிபதி எட்வேர்ட் ஷிவர்நாசே பதவி விலகவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிவருகின்றனர்.

"ஜனாதிபதி இராஜினாமாச் செய்யும் வரை நாம் இங்கிருந்து வெளியேற மாட்டோம்" - என்று ஜனாதிபதியின் மாளிகைக்குச் செல்லும் வீதியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்திவரும் எதிர்க்கட்சித் தலைவர் மிஹேய்ல் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுவருகிறது.

# அமெ. பெண் போர்க்கைதி மீது ஈராக்கியர்கள் வல்லுறவாம்

லண்டன்,நவ.10

ஈராக்போரின் போது சிறைப் பிடிக்கப்பட்ட அமெரிக்க வீராங்கனை ஜெசிக்கா, ஈராக் வீரர்களால் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் என்று திடுக்கிடும் தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

ஈராக் போரின் போது சிறை பிடிக்கப்பட்ட அமெரிக்க வீராங்கனை ஜெசிக்கா லிஞ்ச், எட்டு நாள்களுக்குப் பின்னர் அமெரிக்க அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டார். இருபது வயதான ஜெசிக்கா தான் சிறைப் பிடிக்கப்பட்டபோது நேர்ந்த கசப்பான அனுபவங்களை முதன்முறையாக வெளியிட்டிருக்கிறார்.

எதிரிகளின் பிடியில் இருந்து தப்பிக்க முயன்றபோது காட்டு மிராண்டித்தனமான சில ஈராக் வீரர்கள் தனது கற்பை சூறையாடினர் என்று அவர் கூறி இருக்கிறார்.

சிறைப்பிடிக்கப்பட்டபோது ஜெசிக்காவுக்கு நேர்ந்த அனுபவங்கள் புத்தக வடிவில் வெளிவர இருக்கின்றன. அதில் இந்த தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில், தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த ஜெசிக்கா, தான் விடுவிக்கப்பட்ட போது தவறான தகவல்களை அளித்த அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மீது கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

ஈராக் மருத்துவமனையில் இருந்து பலத்த காயங்களுடன் ஜெசிக்காவை அதிரடிப்படையினர் தூக்கி வருவது போல் அப்போது வெளியிடப்பட்ட வீடியோ படம் தேவையற்ற ஒன்று என்றும், அதிரடிப்படையினர் தமது திறமையை வெளிக்காட்டும் வகையில் பொய்ப் பிரசாரத்துக்காக தன்னைப் பயன்படுத்திக்கொண்டனர் என்றும் அவர் குற்றம் சுமத்தி இருக்கிறார்.

இதேபோல், சிறை பிடிக்கப்பட்ட போது இயந்திர துப்பாக்கியால் எதிரிவீரர்களை தான் சுட்டதாக வெளிவந்த பென்டகன் அறிவிப்பையும் ஜெசிக்கா மறுத்திருக்கிறார்.

## உலக அரங்கில்

### அமெ. வீரர் மூவர் ஈராக்கில் பலி!

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற தாக்குதலில் அமெரிக்கப்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். வீதியோரம் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் அமெரிக்க கவசவாகன அணி ஒன்று சிக்கியதாகவும் - அதிலேயே அமெரிக்கப்படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை பலூஜா நகரில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் இரு அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். (ஒ)



பிரான்ஸின் 90 ஆண்டு கால ஆதிக்கத்திலிருந்து சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு தினம் நேற்று கம்போடியாவில் கொண்டாடப்பட்டது. 81 வயதான மன்னர் நொரோடம் சிஹானூக் மற்றும் ராணி மொனியத் ஆகியோர் தலைநகர் பெனோம் பென்னில் உள்ள சுதந்திரசதுக்கத்தில் இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

கடந்த ஜூலையில் இடம்பெற்ற தேர்தலில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து கம்போடியாவின் மூன்று பிரதான எதிர்க்கட்சிகளும் இணைந்து தேசிய அரசொன்றை அமைக்க கடந்த வாரம் இணக்கம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



புத்தூர் வடக்கைச் சேர்ந்த

## உயர்திரு. க.மகேந்திரன்

அவர்கள் கடந்த 06.11.2003 அன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், புத்தூர் வளர்மதி ச.ச. நிலையத்தின் ஆரம்பகாலச் செயலாளராகவும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் புத்தூர் வடக்கு அலகின் தலைவராகவும் கடமையாற்றினார். மேலும் அச்சுவேலி ப.நோ.கூ. சங்கத்தில் இயக்குநர் சபை உறுப்பினராகவிருந்து பணியாற்றிய இவர் தற்போது மேற்படி சங்கத்தில் கல்வி/நிதி உபசபை உறுப்பினராகவும், தனியார் கல்வி நிலைய ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார்.

*தகுதியும் சிறப்பும் மக்கள் சேவை உள்ளமும் கொண்டவருக்கு*
*இந்தப் பதவியை வழங்கியதற்காக நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.*

சுன்னாகம் வீதி,
புத்தூர்.

வாழ்த்துவோர்:
**வளர்மதி சனசமூக நிலையம்.**

(24557) (26-13-16-24)

---

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

(24540)

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் :222 2459

---

# இலங்கை அரசு

## வடக்கு - கிழக்கு மாகாணசபை

## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டம்

## கடன் இல: 2880 - சி.இ.(C.E.)

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

## (நிர்மாண வேலைகள்)

## கேள்வி அறிவித்தல் - ஐ.எவ்.பி. (I.F.B.)

ஐ.எவ்.பி. இல.: கேஜ/நீர்ப்/ஐடி/03 திகதி: 10.11.2003

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின்கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.
02. செயலாளர், விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன அமைச்சு, வ.கி.மா. இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கீழ் தரப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கு கோரப்படுகின்றன. ஒப்பந்தகாரர்கள் தனி ஒரு வேலைக்கோ அல்லது எல்லா வேலைகளுக்குமோ கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கலாம்.
03. மீளளிக்கப்படாத கட்டணமாக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பொதிக்கும் தனித்தனியாக காசாகவோ அல்லது திருகோணமலையில் மாற்றத்தக்கதான, செயலாளர், விவசாய அமைச்சு வ.கி.மா., திருகோணமலை, இலங்கை அவர்களின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி, இலங்கை அவர்களிடமிருந்து 09.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை கீழ் தரப்பட்ட முகவரியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**கிளிநொச்சி, இலங்கை.**
தொலைபேசி இல.: **021 222 3969** தொலை நகரி: **021 222 3969**

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 10 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், செயலாளர், விவசாய அமைச்சு, வ.கி.மா., திருகோணமலை, இலங்கை அவர்களின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 10.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு கேள்விச்சபை,**
**விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன,கடற்றொழில் அமைச்சு,**
**வ.கி.மா., திருகோணமலை,**
**இலங்கை.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதேஇடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| *கேள்வி குறியீட்டு இல.* | *வேலை விவரம்* | *கேள்விப் பிணை ரூபா* | *கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா* | *வேலை நிறைவேற்றப்பட வேண்டிய காலம்* |
|---|---|---|---|---|
| கேஜ./நீர்ப்/ஐடி/03/பீ1 | கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் விடுதி மீள் நிர்மாணிப்பு | 45,000.00 | 750.00 | 6 மாதங்கள் |
| கேஜ./நீர்ப்/ஐடி/03/பீ2 | கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகக் கட்டடம் மீள் நிர்மாணிப்பு | 90,000.00 | 750.00 | 6 மாதங்கள் |
| கேஜ./நீர்ப்/ஐடி/03/பீ4 | கிளிநொச்சி பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் விடுதி மீள் நிர்மாணிப்பு | 45,000.00 | 750.00 | 6 மாதங்கள் |
| கேஜ./நீர்ப்/ஐடி/03/பீ5 | கிளிநொச்சி பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகக் கட்டடம் மீள்நிர்மாணிப்பு | 60,000.00 | 750.00 | 6 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்த கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**ப.இராமநாதன்,**
செயலாளர்,
விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு,
வ.கி.மா., திருகோணமலை.

(சி-31148) (24-13-16)

---

# பணிநிலை வெற்றிடம்

## செக்கோட் தனியார் கம்பனி

## SECOTE PRIVATE LIMITED

எமது நிறுவனம், கட்டடங்கள், வீதி நிர்மாணம், மின்சார வேலைத் திட்டங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல்சார் முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன

**பணிநிலைகள்:**

1. பொறியியலாளர் (குடிசார்)
2. கணக்காளர்
3. தொழில்நுட்ப உதவியாளர்
4. பட வரைஞர்
5. மேற்பார்வையாளர்
6. கணக்குப் பதிவாளர்
7. எழுதுநர்
8. களஞ்சியக் காப்பாளர்
9. சாரதி
10. காவலாளி

**தகைமைகள்:**

பணிநிலை 1:-
* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் (B.Sc. Eng.).
* கட்டடம், வீதி நிர்மாணம் தொடர்பான முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

பணிநிலை 2:-
* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் (BBA/B.Com.).

அல்லது

* HNDA அல்லது AAT i, ii அல்லது NCAT சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
* முன்னனுபவம் எதிர்பார்க்கப்படும்.

பணிநிலை 3:-
* உயர்தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ் (NDT அல்லது NCT குடிசார் / மின்னியல்) இருத்தல் வேண்டும்.
* முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

பணிநிலை 4:-
* உயர்தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ் இருத்தல்வேண்டும்.
* குடிசார் பொறியியல் அறிவு இருத்தல் விரும்பத்தக்கது.
* கணனி அறிவு, விசேடமாக ஓட்டோ கட் (Auto Cad) கற்றிருத்தல் விரும்பத்தக்கது.
* ஆங்கில அறிவும் வேலை முன்னனுபவமும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

பணிநிலை 5:-
* தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட (NCT) சான்றிதழ் அல்லது 2 ஆம், 3 ஆம் வருடத்தைப் பூர்த்தி செய்தவர்கள்.

பணிநிலை 6:-
* க.பொ.த. (உ/த) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* ஆங்கில அறிவும் முன்னனுபவமும் இருத்தல் விரும்பத்தக்கது.

பணிநிலை 7:-
* க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* தமிழ், ஆங்கில தட்டச்சு தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.
* கணனி அறிவு (MS Office) இருத்தல் விரும்பத்தக்கது.
* முன்னனுபவமும் ஆங்கில அறிவும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

பணிநிலை 8:-
* க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* ஓரளவு ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத்தக்கது.
* முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

பணிநிலை 9:-
* சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
* முன்னனுபவமும் இருத்தல் வேண்டும்.

பணிநிலை 10:-
* 8 ஆம் ஆண்டு சித்தியடைந்தவராகவும் நல்ல தேகாரோக்கிய முடையவராகவும் இருத்தல் வேண்டும்.
* முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

➤ கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
➤ தெரிவுசெய்யப்படுவோர் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்பட்டு சுயவிவரக்கோவையுடன் 20.11.2003ஆம் திகதிக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிட்ட முகவரிகளில் ஏதேனும் ஒன்றுக்கு தபாலில் அல்லது நேரில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மின்னஞ்சல் (E.mail) மூலமான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

*E.mail*: **secoteinfo @ yahoo.com**

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி:

**SECOTE PRIVATE LIMITED**
50, Peters Lane,
Dehiwala.

**SECOTE PRIVATE LIMITED**
74, Rattnapuram,
Kilinochchi.

**SECOTE INFORMATION TECHNOLOGIES (PVT) Ltd.**
325/1, Palaly Road,
Thirunelvely, Jaffna.

(24522) (24-13-16)

---

# மரண அறிவித்தல்

## இளையதம்பி ஆறுமுகம்

**(உரிமையாளர், சரஸ்வதி பேக்கரி, புத்தூர் கிழக்கு)**

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி ஆறுமுகம் அவர்கள் நேற்று (09.11.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவபாலன் (மத்திய மருந்தகம், புன்னாலைக்கட்டுவன்), குணரத்தினம், குணசேகரம், ஞானசேகரம் (மூவரும் லண்டன்), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யோகராணி, பிருந்தா, அருணா, கருணா, தங்கராசா (சூரியா ரான்ஸ்போட் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் சதாசிவம், செல்லம்மா, தங்கம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுஜீபன் (லண்டன்), சுஜிதா, பரணிதரன், பகுணா, கீர்த்தனா, நிஷாந்தன், நிரோஷன், கெவின், புளோரா, திலக்ஷன், வித்தகி ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2003) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புத்தூர் அந்திராணை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.*

தகவல்:
ஆ.சிவபாலன் (மகன்),
இ.தங்கராசா (மருமகன்).

(24559) (24-13-16-24)

உதயன்

# பொறுப்புடன் செயற்பட ஜனாதிபதி முன்வரவேண்டும்

கடந்தவாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட அதிரடி அரசியல் நடவடிக்கைகளினால் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்கு விரைந்து தீர்வு காணப்படுவதற்கான வாய்ப்புகள் அருகி வருகின்றன என்றே தோன்றுகின்றன.

பிரதமர் ரணிலின் பக்கத்திலிருந்து மூன்று முக்கிய அமைச்சுப் பதவிகளைப் 'பிடுங்கித்' தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஜனாதிபதி குமாரதுங்க அதனைத் தொடர்ந்து ஏற்படும் அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி ஆளும் ஐக்கிய தேசிய முன்னணித் தரப்பிலிருந்து கணிசமான எம்.பிக்களைத் தனது பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு தாவவைக்கலாம் என எதிர்பார்த்தார்.

இவ்வாறு நாடாளுமன்றக் கதிரைகளின் எண் கணிதத்தைத் தமக்குச் சாதகமாக மாற்றுவதற்குக் கால அவகாசம் தேவைப்படும் எனக் கருதிய அவர், அதற்கு வசதியான இடைவெளியைப் பெறுவதற்காக - தமக்கிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி - நாடாளுமன்றத்தை இரண்டுவார காலத்துக்கு ஒத்திவைத்தார்.

ஆனால், மூன்று அமைச்சர்களின் பதவிப் பறிப்பால் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் எழுந்த அரசியல் அதிர்வுகள் ஜனாதிபதிக்குப் பாதகமான சூழ்நிலையையே தோற்றுவித்திருக்கின்றன என்பதுதான் உண்மை.

நாடாளுமன்றத்தில் ஆக ஒரேயொரு அதிகப்படியான வாக்குடன் - 113எம்.பிக்களுடன் மட்டும் - ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்த பிரதமர் ரணிலுக்கும், இப்போது மொத்தம் 130எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்து அவர் மீது நம்பிக்கை வைத்து அது தொடர்பான கடிதத்திலும் ஒப்பமிட்டதன்மூலம் அவரை மேலும் வலுப்படுத்தியிருக்கிறார்கள்.

அரசியல் முதிர்ச்சியற்ற போக்கில் - அவசரப்பட்டு - தான்தோன்றித்தனமாக - ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அவருக்குப் பெரும் பின்னடைவைத் தந்திருக்கிறது. அதே நேரம், இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக - பெரும் அரசியல் முதிர்ச்சியோடும் - பொறுப்புடனும், நிதானத்துடனும், அமைதியாகவும் பதற்றப்படாமலும் பிரதமர் ரணில் செயற்பட்ட விதம் அவருக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நல்ல பெயரை வாங்கித் தந்திருக்கின்றது.

அரசுத் தரப்பிலிருந்து எம்.பிக்களைக் கவர்ந்திழுத்து, தனது அரசை உருவாக்கும் தமது முயற்சி வெற்றியளிக்கப் போவதில்லை என்பதைக் காலம் தாழ்த்தியேனும் உணர்ந்த ஜனாதிபதி, மாற்று முயற்சியாக 'தேசிய நல்லிணக்க அரசு' என்ற புதுக்கதையை விட முயல்கின்றார்.

ஆனால், பிரதமர் ரணிலுக்கு பரிபூரண ஆதரவு தெரிவித்திருக்கும் 130எம்.பிக்களில் யாரும் இந்த 'தேசிய அரசு' அமைக்கும் புருடாவுக்கு எடுபடமாட்டார்கள் என்பது நிச்சயம்.

இந்தப் பிரச்சினைகள் மற்றும் அமைச்சர் பதவிகள் பறிப்புப் போன்ற விடயங்களில் ஜனாதிபதியின் பொ.ஐ. முன்னணியை ஆதரித்து வந்த ஜே.வி.பி. கூட ஜனாதிபதியின் 'தேசிய நல்லிணக்க அரசு' யோசனையைக் கடாசி வீசிவிட்டது; ஏற்க மறுத்துவிட்டது.

ஜனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகள், செயற்பாடுகள் என்பன அரசமைப்பு ரீதியாகத் தவறற்றவை என்று வாதிடலாம். சட்டப்படி சரியானவையாகவும் கூட அவை இருக்கலாம். ஆனால், நார்மீகப்படி அவை தவறானவை. நாட்டின் அரசியல் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கும் - அழிக்கும் - செயற்பாடுகளே அவை.

அதனால்தான் எதிர்க்கட்சிகளின் தரப்பிலும் பல கட்சிகள் கூட இவ்விடயத்தில் அரசை - பிரதமரை - ஆதரிக்க முன்வந்திருக்கின்றன.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை - விருப்பத்தை - ஒதுக்கிவிட்டு, சட்டத்தினால் தனக்கு தரப்பட்ட அதிகாரத்தை வைத்து 'அரசியல் சித்து விளையாட்டு' காட்ட முயல்கிறார் ஜனாதிபதி. ஆனால், அதன் விளைவு மோசமாகலாம்.

நாடாளுமன்றம் நினைத்தால் ஜனாதிபதிக்கும் அவர் பொறுப்பேற்ற அமைச்சுகளுக்கும் என ஒதுக்கப்படும் நிதியை வெட்ட முடியும்.

அத்தகைய மோசமான வழிமுறையை நாடுவதற்கு நாடாளுமன்று தள்ளப்பட்டு, அத்தகைய நிலைப்பாட்டை நாடாளுமன்றம் எடுக்குமானால் ஜனாதிபதியின் அலுவலகச் செயற்பாடுகள் முடக்கப்படும்; ஜனாதிபதியின் நடவடிக்கைகள் பாதிக்கப்படும். மோசமான அரசமைப்பு நெருக்கடிகள் ஏற்படும்.

அத்தகைய நிலை ஏற்படாமல் தவிர்ப்பதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்குவது ஜனாதிபதியின் பொறுப்பு.

குறுகிய அரசியல் இலாபங்களைக் கருதாமல், அவற்றைத் துறந்து, பொறுப்புணர்வோடும், நாட்டின் தலைமைக்குரிய பண்போடும், நாட்டை வழிநடத்திச் செல்ல அவர் முன்வரவேண்டும்.

## காலத்தின் பதிவு



பிஞ்சுத் தோளில் பாசச் சுமை... படம் : பிரேம்

# மாணவரின் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை அவசியம்!

## பாடசாலை அதிபர்களுக்கு அதிகாரி அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு,நவ.10

பாடசாலை மாணவர்களின் பொலித்தீன் பாவனையை முடிந்தளவு குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் கேட்டுள்ளதாவது:

மாணவர்கள் வெளியிலிருந்து பாடசாலைக்கு உண்பதற்காக உணவுப் பண்டங்களை எடுத்து வருவது வழக்கமாக உள்ளது. அவ்வாறான உணவுப் பொருள்களை 'பொலித்தீன்' பைகளில் மாணவர்கள் பொதிசெய்து எடுத்துவருகின்றனர்.

உணவை உண்டபின்னர் பொலித்தீன் உறைகளை அவர்கள் பாடசாலை வளாகத்தில் வீசிவிடுகின்றார்கள்.

மழை காலங்களில் இப்பொலித்தீன் உறைகளில் நீர் தேங்கி அதன்மூலம் நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன், உணவு மணத்துடன் கூடிய இவ்வுறைகளை உண்ண நேரிடும் கால்நடைகள் உயிரிழக்கவோ அல்லது உடல் உபாதைக்குள்ளாகவோ அதிக வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மேலும் இந்தப் பொலித்தீன் உறைகள் பாடசாலைத் தோட்டங்களில் மண்ணில் புதைவதால் பயிர்களின் வேரோட்டம் தடைப்படுகின்றது.

ஆகவே, பல்வேறு வழிகளிலும் பொதுவாகத் தீங்கை விளைவிக்கக் கூடிய பொலித்தீனை கூடியவரை தவிர்த்து உணவுப் பண்டங்களை கடதாசிகளில் சுற்றி எடுத்து வருமாறு மாணவர்களுக்கு பாடசாலை அதிபர்கள் அறிவுறுத்தவேண்டும்.

- இவ்வாறு செ.குபேரநாதன் உடுவில் கோட்ட பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஒ-152)

# பாதிக்கப்பட்டோர் விவரங்கள்; கிராம அலுவலர்கள் சேகரிப்பு!

வலி.வடக்கு,நவ. 10

உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் படையினர் நிலைகொண்டுள்ளமை ஆகிய காரணங்களால் பாதிக்கப்பட்டோர் குறித்த விவரங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் திரட்டப்படுகின்றன.

கிராம அலுவலர்கள் தத்தம் பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களை சேகரித்து வருகின்றனர்.

கடந்த கால யுத்தங்கள் காரணமாக அழிக்கப்பட்ட பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வணக்கத் தலங்கள் மற்றும் பௌதிக பண்பாட்டு அம்சங்கள் சம்பந்தமான விவரங்களும் திரட்டப்படுகின்றன.

அத்துடன், வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள் விவசாயம் உட்பட தொழில்முயற்சிகள் போன்றவைகளும் பெறப்பட்டு வருகின்றன.

இதேநேரம் உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவம் நிலைகொண்டுள்ளமையினால் மீளக்குடியமர முடியாமை தொழில் செய்ய முடியாமை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன. (ஒ-86)

# அடைமழையுடன் மீன்கள் விழும் அபூர்வ நிகழ்வு சாவகச்சேரியில்!

சாவகச்சேரி,நவ.10

மழையுடன் சிறுமீன்களும் வந்து விழுந்த அபூர்வ நிகழ்ச்சி கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பெருங்குளம் வயல்பகுதி, மட்டுவில், கல்வயல் வீதி ஆகிய இடங்களில் அன்றையதினம் அடைமழை பெய்ததாகவும் - அப்போது அப்பகுதிகளில் சிறுமீன்கள் வீழ்ந்து கிடந்ததைக் காண முடிந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

நன்னீர்க்குளங்கள் மற்றும் கடற்பகுதியில் இருந்து வான் நோக்கிப் பெருமளவு நீர் திடீர் என்று உறிஞ்சி எடுக்கப்படும் சம்பவங்கள் மழை காலங்களில் இடம்பெறுவதாகவும் -

- இவ்வாறு வானத்திற்கு உறிஞ்சியிழுக்கப்பட்ட நீருடன் அள்ளிச்செல்லப்படும் மீன்கள் பின்னர் மழை பெய்யும் பொழுது நீருடன் நிலத்தில் வந்து விழுவதாகவும் - கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-31)

# மாணவியிடம் சேஷ்டை புரிந்த 35 வயது நபர் பிடிபட்டார்!

வலி.வடக்கு, நவ.10

வீதியில் சென்ற மாணவியிடம் சேஷ்டை புரிந்தவரை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் மடக்கிப்பிடித்தனர்.

இச்சம்பவம் தெல்லிப்பழைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

மாணவி ஒருவர் தொப்பி அணிந்து கொண்டு வீதியால் சென்றதாகவும் - அப்போது மதுபோதையில் வந்த 35 வயது நபரொருவர் மாணவியிடம் தொப்பியைப் பறித்து சேஷ்டை புரிந்ததாகவும் - அவ்வழியே அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் இருவர் அந்த நபரை மடக்கிப் பிடித்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது. பிடிபட்ட நபருக்கு கடுமையாக அறிவுறுத்தப்பட்டு, விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-86)

### நாளை

ஐப்பசி 25
செவ்வாய்க்கிழமை
(11.11.2003)
திதி : துதியை
முற்பகல் 11.13 வரை
நட்சத்திரம்: ரோகிணி
முன்னிரவு 9.16 வரை
சுபநேரம்: 10.36 - 12.06
ராகுகாலம்: 3.05 - 4.36
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தவறு அறிவியலில் இல்லை. அந்த அறிவை தீய முறையில் பயன்படுத்தும் மனிதனிடத்தில் தான் இருக்கிறது.

# 'அப்பிள் பழம்' என்ற பெயரில் கசிப்பு விற்பனை அமோகம்

இணுவில்,நவ.10

'அப்பிள் பழம்' என்ற சங்கேதப் பெயரில் கசிப்பு விற்பனை இடம்பெற்றுவருகிறது. குறிப்பாக இணுவில், உரும்பிராய் மேற்கு, அன்னுங்கை மற்றும் கோண்டாவில் ஆகிய பகுதிகளில் கசிப்புக்கு இந்தச் சங்கேதப் பெயர் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், இதற்கு தரகர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

கலாசாரத்தை பேணும் இளைஞர்கள், விழிப்புக் குழுக்கள், பொலிஸார் மற்றும் அதிகாரிகள் ஆகிய பல தரப்பினரும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால், கசிப்பு உற்பத்தி செய்வோரும் விற்பனை செய்வோரும் அடிக்கடி இடத்தை மாற்றநேரிடுகிறது.

இந்நிலையில், கசிப்பு விற்கும் இடத்தைத் தேடி அலைவோர 'அப்பிள் பழம்' எங்கு கிடைக்கும்? என்று விசாரிப்பதாகவும் -

விடயமறியாதோர் பழக்கடைகளை காட்டுவதாகவும், இதற்கென உள்ள தரகர்கள் அவர்களை அழைத்துச் சென்று கசிப்பு விற்கும் இடத்தை காண்பிப்பதாகவும் - கூறப்படுகிறது.

இதேசமயம், அதிகாரிகள் உட்பட கசிப்பு ஒழிப்பில் ஈடுபடுவோரின் நடமாட்டம் குறித்தும் இந்தத் தரகர்கள் கசிப்பு விற்பனையாளருக்கு தகவல் கொடுத்துவிடுகின்றனர். இத்தரகர்களுக்கு ஊதியமாக கசிப்பே வழங்கப்படுகிறது. (ஒ-10-49)

மீளக்குடியமர்ந்த மக்களுக்கென

# சிறுவர் பாதுகாப்பு நிதியம் மலசலகூடங்களை நிறுவும்

யாழ்ப்பாணம்,நவ.10

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் யாழ் மாவட்டத்தில் மீளக குடியமர்ந்த மக்களுக்கென நூறு மல சலகூடங்களை அமைத்து கொடுப்பதற் கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

மேற்படி மலசலகூடங்களை நிறு வும பணிகள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தின அனுசரணையுடன் நடைபெறும் என்று நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு மலசலகூடத்திற்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் செல விடப்படும் என்றும் - கூறப்பட்டது.

போர்ச் சூழல் காரணமாக இடம் பெயர்ந்து வன்னி சென்று பின்னர் மீளக் குடியமர்ந்த மக்கள் இந்த மலசல கூடங்களைப் பெறவுள்ளனர்.

மலசலகூடங்களை நிறுவுவதற்கான அனுமதியினை யாழ் அரச அதிபரிடமி ருந்து தாம் எதிர்பார்ப்பதாகவும் -அனு மதி கிடைத்ததும் மலசலகூட நிர்மாண வேலைகள் உடன் ஆரம்பிக்கக் கூடிய தாக இருக்கும் என்றும் - தெரிவிக்கப் பட்டது. (எ-7)

## பயணிகள் சிரமம்

தென்மராட்சி,நவ.10

பஸ்ஸினுள் குடை பிடித்த வண் ணம பயணம் செய்யும் அவலநிலை சாவகச்சேரி - பருத்தித்துறை பஸ் ஸில் அண்மையில் இடம்பெற்றது.

பஸ்ஸில், ஜன்னல் கண்ணாடி கள் இல்லாததால் மழைபெய்யும் வேளையில் பயணிகள் இருக்கை களை விட்டு எழுந்து நின்று குடை யைப் பிடித்தவண்ணம் பயணம் செய்தனர் என்றும் - கூறப்பட்டது.

மேற்படி பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் போதிய வசதிகளைக் கொண்டவை அல்ல என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட
வ.பி.போ.ச. சிரேஷ்ட சாலைப் பரிசோதகரும்,
தேசிய ஊழியர் சங்க அமைப்பாளரும்,
சிவகௌரி சனசமூக நிலைய முன்னாள் தலைவரும்,
சிறந்த சமூக சேவையாளருமாகிய

**திரு. செல்வரத்தினம் செல்வராசா**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரை நாம் மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றோம். எமது ஆலய வளர்ச்சிக்கும், சனசமூக நிலைய வளர்ச்சிக்கும் உதவி எமது கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்து சேவையாற்றும் திறனும் தொடர்ந்து சமூகசேவை செய்திட எல்லாம்வல்ல இறைவன் திருவருள் கடாட்சம் அவருக்குக் கிடைக்கவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

சுழிபுரம் மேற்கு
அம்பாள் சனசமூக நிலையத்தினர்,
பேத்தி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர்.

(24510)(34-24-13-25)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 01-10-1938 | மறைவு 01-10-2003

அமரர்

# நண்ணியர் கந்தையா

(அப்பையா)

*அன்பிலும் பண்பிலும் அகிலம் போற்ற வாழ்ந்தீர்!*
*உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.*

எமது குடும்பத்தலைவரின் மறைவுகேட்டு நேரில் வந்து உதவி யவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு பல வழிகளிலும் உதவியோர்க்கும் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன், இன்று (10.11.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தி யேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

*அளவெட்டி கிழக்கு,*
*கும்பழை.* (24545) (34-13-24-25) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 21 - 05 - 1991 | 11 - 10 - 2003 |


# செல்வி மதிஷாயினி பாலச்சந்திரன்

(தரம் 8 மாணவி, யா/கனகரத்தினம் ம.ம.வி.)

அன்போடு அருகிருந்து ஆசைமொழி பேசி எம்மை
இன்பத்தில் திளைக்க வைத்த அன்புச் செல்வமே!
முப்பத்தியோர் நாள்கள் முடிந்தனவோ எமைப் பிரிந்து
முடியவில்லை நம்புதற்கு முகம் முன்னே நிற்குதம்மா.
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சின்னக்கோவில் தெரு,*
*கட்டப்பிராய்,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (24509) (25-24-13)

என்றும் உன் நினைவுகளுடன்:
அன்பு அம்மா,
அண்ணாமார்
மற்றும் பாசமிகு உறவுகள்.



அன்னை மடியில்
06
09
1974

ஆண்டவன் மடியில்
01
10
2003

அமரர்
கிறிஸ்ரியன்
ஸ்ரனிஸ் ஜெயகாந்தன் B.A.
[ஆசிரியர், இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை]

# 41ஆம் நாள் பிரிவின் நினைவு

(இணைக்குறள் அகவை)

இளமையுள் இளமை பெரும்பே றின்பம்
முதுமையுள் முதுமை அருட்செல்வ மொன்றே
கருவிலே கல்வி
உருவிலே மலர்ந்தது
விடலையிற் பொலிந்து
மன்பதை பயவுற
என்தவம் செய்தோம்என எம்மவர் சொல்லிட
ஆற்றிய சின்நாளில் அமரருள் ஆனாய்!
ஆறுமா எம்நெஞ்சம்?!
உன்பிரிவின் இழப்பு முடிவற்ற துன்பம்!
கன்றிழந்த பசுவாய்
கதறியழ வார்த்தை
இன்றுவரை இல்லை, இல்லை!
எமக்கு ஆறுதலும் இல்லை!
போதும் ஐயா போதும்
நிலையாமை விளக்கம்!
நிலையற்ற வாழ்வில் நிலையாமை சொல்லி
நிலையுள்ள வாழ்வைத் தேடிநீ
நிமலன் பாதம் இணைந்தாயோ மகனே!

எமது மகனின் பிரிவை அறிந்து வெளிநாடுகளிலிருந்தும் வெளிமாவட்டங் களிலிருந்தும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமக்கு ஆறுதலும் தேறுதலும் மன்றாட்டுக் களும் வழங்கிய உள்ளூர் அன்பர்களுக் கும் மடுக் கல்வி வலய உத்தியோகத் தர்களுக்கும் இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது அன்பு கலந்த நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

951/10 வன்னபுரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

அவர் பிரிவில் துயருறும்:
குடும்பத்தினர்.

# கிடைத்துள்ள வளங்களை பயன்படுத்தினால் ஓரளவேனும் கல்வியில் முன்னேறலாம்!


கடந்த பல வருடங்களாக கல்வி வளர்ச்சி நிலையில் யாழ்ப்பாண மாவட்டமே இலங்கையில் மாவட்ட ரீதியாக முன்னணி நிலை வகித்து வந்துள்ளது.

ஆனால், கடந்த சில வருடங்களாக யாழ். மாவட்ட கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும், கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துவிட்டதாகவும் ஆய்வுகள் மூலமாக - கல்வித்திணைக்கள அறிக்கைகள் மூலமாக - பரீட்சை பெறுபேறுகள் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இவற்றுக்கெல்லாம் பல்வேறு காரணங்களை நியாயப்படுத்தி சமாதானம் கூறலாம். யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்குரிய வளங்கள் பல பற்றாக்குறையாக இருப்பது இக்குறைபாட்டுக்குரிய முக்கிய காரணமாக கூறப்படுகிறது. பாடசாலை பௌதிக வளம், ஆசிரியர் வளம் போன்றவற்றில் யாழ்ப்பாண மாவட்டம் பெரும் பின்தங்கி, பற்றாக்குறை நிறைந்து வருகின்றது.

எனினும், கல்வி அமைச்சால் வழங்கப்படும் நிதியினைக் கொண்டு நூலகங்களை அமைக்கவும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நூல்களையும், கணனிகள் போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகள் அவற்றை உரிய முறையில் மாணவர் பயன்படுத்தத் தக்க முறையில் இன்னமும் தம்மை தயார்படுத்திக் கொள்ளவில்லை என்றே கூறலாம்.

பாடசாலைகளுக்கு பெறுமதி மிக்க நூல்கள், கணனி போன்றவை கிடைத்தாலும் அவற்றை பயன்படுத்தத்தக்கதான நூலக கட்டட வசதிகள், தளபாடவசதிகள் என்பன ஏற்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக கிடைக்கப்பெறும் நூல்களும்,கணனிகளும் பாடசாலை அலுவலக அறையில் உள்ள அலுமாரிகளிலேயே முடங்கிக் கிடக்கின்றன. மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள், வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.




பர்கள், ஆசிரியர்கள் போன்றோரின் அசட்டையீனம், அசமந்தப் போக்கு என்பனவற்றை எடுத்துக்காட்டுவதாகவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர் வளப்பங்கீடு சீரான முறையில் அமைக்கப்படாமை மற்றொரு குறைபாடாகும். குறைந்தளவு மாணவர் உள்ள பாடசாலையில் பாடசாலை தேவைக்கு கூடுதலாகவும் கூடியளவு மாணவர் உள்ள பாடசாலைகளில் தேவைப்படும் ஆசிரியர் தொகைக்கு குறைவாகவும் வளப்பங்கீடு இடம்பெற்றிருப்பதும் குறைபாடாகும். இக்குறைபாடுகளால் ஆசிரிய பற்றாக்குறை நிலவுவதாக கருதப்பட்டாலும் ஆசிரிய பற்றாக்குறைக்கு பல வருடங்களாக உரிய ஆசிரிய நியமனங்களை அரசு வழங்காமையே உண்மையான ஆசிரிய பற்றாக் குறைக்கு காரணம் எனலாம்.

பல ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக ஒரே பாடசாலையில் சேவை புரிகின்றனர். சிறந்த கற்பித்தல் திறமையுடைய ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக கற்பிப்பது அவர்களின் சேவை ஒரு குறுகிய வட்டத்தினருக்கு மட்டுமே கிடைக்கச் செய்கிறது. நகர்ப்புறப் பாடசாலைகள், பிரபல்யம் வாய்ந்த பாடசாலைகளில் இவர்கள் கற்பிப்பதால் அவர்களின் சேவையைப் பெற கிராமப்புற மாணவர்கள் தமது பகுதிப் பாடசாலைகளை விட்டு நகர்ப்புற பாடசாலைகளுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது.

ஆசிரிய இடமாற்றத்திட்டம் சீராகக் கடைப்பிடிக்கப்பட்டால் கற்பித்தல் திறமை உடைய ஆசிரியர்களின் சேவை பலருக்கும் கிடைக்கும்.

சிறந்த ஒரு கல்விச் சமுதாயத்தை உருவாக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஆசிரியர்கள் தங்கள் சுயநலன்களுக்காக குறுகிய நோக்கங்களுக்காக நகர்ப்புற பாடசாலைகளில் மட்டும் தொங்கிக் கொண்டிராமல் கிராமப் புறங்களுக்கும் தம் சேவைகளை வழங்கி கிராமப் புற ஏழைச் சிறுவர்களின் கல்வி அறிவை மேம்படுத்த முன்வரவேண்டும்.

காணப்படுவது உண்மை.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கும்போது தென்பகுதி மாவட்ட பாடசாலைகளுக்கு கிடைக்கும் வளங்களை விட மிகமிகக் குறைந்தளவு வளங்களே யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கிடைத்து வருகின்றன.

எப்படி இருப்பினும் கிடைக்கப் பெறும் வளங்களை திட்டமிட்ட முறையில் பங்கீடு செய்து பயன்படுத்தினால் கல்வியில் இன்று நிலவும் குறைபாடுகள் பல நிவர்த்தி செய்யப்படலாம். கல்வியில் வளர்ச்சி நிலையை ஏற்படுத்த முடியும் என்பது கல்வியாளர்கள் பலரின் கருத்தாக அமைகின்றது.

அண்மையில் அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் நூலக வளர்ச்சிக்கும் பயன்பாட்டுக்கும் பெரு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

எல்லாப் பாடசாலைகளிலும் நூலகங்கள் இருக்கவேண்டும். மாணவர்கள் பயனுள்ள நூல்களை நூலகங்களில் இருந்து பெற்று வாசித்து தமது கல்வித்தேடலுக்கு வழிசெய்ய வேண்டும் என்பது இதன் பிரதான நோக்காக அமைந்தாலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் கணிசமான அளவு பாடசாலைகள் நூலகங்களை கொண்டிருக்கவில்லை என்பது என்னவோ உண்மைதான்.

நூலகங்களை ஏற்படுத்தவும், அவற்றுக்குத் தேவையான அறிவு நூல்களை வழங்கவும் கல்வி அமைச்சு பெரும் சிரமம் எடுத்து பல தொகைப் பணத்தையும் செலவழித்து

ஒருசில பாடசாலைகள் நூல்களையும். கணனிகளையும் பயன்படுத்த தொடங்கி உள்ள போதிலும் பல பாடசாலைகளில் கணனிகள் கிடைத்தமை பற்றி மாணவர்களோ ஆசிரியர்களோ அறிந்துகொண்டதாக தெரியவில்லை. அவை அலுமாரிகளில் பாதுகாப்பாக கிடக்கவே செய்கின்றன.

ஓரளவுக்கேனும் கிடைக்கும் நூல்களையும் கணனிகளையும் மாணவர்கள் பயன்படுத்த வசதி செய்து கொடுக்கும்போது கல்வியில் வளர்ச்சி நிலை ஏற்படும் என்பது திண்ணம்.

கணனிகளை கையாளக்கூடிய அறிவு ஆசிரியர் மத்தியில் இல்லாமை, மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் கணனிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்; அவற்றை சரிசெய்யக் கூடிய அறிவின்மை, கணனிக்கான உதிரிப்பாக தட்டுப்பாடு என்பனவும் கணனிகள் கையாளப்படாமல் இருப்பதற்குரிய காரணங்களாக கூறப்படலாம்.

எப்படி இருப்பினும், இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து கிடைக்கும் குறைந்தளவு வளங்களை பயன்படவைப்பதில் பாடசாலை முகாமை ஊக்கமுடன் செயற்படவேண்டும்.

பாடசாலைகளின் பயன்பாட்டுக்கென வழங்கப்படும் கற்றல், கற்பித்தல் தொடர்பான உபகரணங்கள் கூட உரிய முறையில் பயன்படுத்தப்படாமல் களஞ்சிய அறைகளில் போட்டு வைக்கப்பட்டுள்ள நிலைகூட சில பாடசாலைகளில் இன்னமும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இது சம்பந்தப்பட்ட பாடசாலை அதி

## நிறைமுனைவன்

ஆசிரிய வள ஒதுக்கீடுகளின் போது அரசியல்வாதிகள், மேலதிகாரிகள் போன்றோரின் தலையீடுகள் இருக்கக்கூடாது.

எனவே, வளங்கள் குறைவாக இருப்பினும் அவற்றைச் சீரான முறையில் பேணாமையும் கையாளாதிருப்பதும் கல்வி வளர்ச்சிக்குரிய தடைகளாகக் கருதமுடியும்.

வளங்களை திட்டமிட்ட முறையில் பூரணமாக பயன்படுத்துவதில் குழப்பங்களோ, குளறுபடிகளோ இருக்கக்கூடாது. மாணவர்களின் சிந்தனைகளைத் தூண்டி அறிவுத் தேடலுக்குரியதும் தன்னம்பிக்கையை வளர்க்கக்கூடியதுமான நவீன தொழில்நுட்ப ரீதியான செயற்பாட்டுக் கல்வியை நாம் வழங்க முன்வரும்போது, இன்று கல்வியில் பின்னடைவைப் பெற்றுள்ள, யாழ். மாவட்ட கல்வி நிலையில் மாற்றம் ஏற்படும் என்பது பலரது நம்பிக்கை ஆகும். ★

# கல்விச்சாலைக் காட்சிகள்



தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு நிகழ்வாக நடைபெற்ற வரவேற்பு நடனத்தில் பங்குகொண்ட மாணவியர்களைப் படத்தில் காணலாம். (எ)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் ஆசிரியர்தின விழாவில் கலந்துகொண்ட அதிபர், ஆசிரியர்கள் மற்றும் விருந்தினர்களைப் படத்தில் காணலாம். (படம்:வலி. வடக்கு செய்தியாளர்)



யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் 'படி' சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. பீடாதிபதி தி.கமலநாதன் சஞ்சிகையின் முதற் பிரதியை டாக்டர் வை. தியாகராசாவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம் வலி.தெற்கு செய்தியாளர்)



தாவடி மத்திய சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் இயங்கும் முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- கொக்குவில் செய்தியாளர்)

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## பிரதேச விவசாயக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வலி.மேற்கு.நவ.10

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பித்தும் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு தொல்புரம் கமநல சேவை நிலையத்தினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் -

எனவே, உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்படி சம்மேளனம் பிடிகாரர்களுக்கு நியாயமான கூலிகளை வழங்கவேண்டும் என்றும் - விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானம் கடந்த 6ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாய குழுக் கூட்டத்தில் விவசாயிகளினால நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா தலைமையில் நடைபெற்றது. விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் தொல்புரம் கமநலசேவை நிலைய அதிகாரிகள், பெரும்பாக உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். பின்வரும் தீர்மானங்களும் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ விவசாய சம்மேளனங்கள் மூலம் விவசாயிகளுக்கு கிருமிநாசினிகள், உரவகைகள் கடனாக வழங்கப்படவேண்டும்.

★ விவசாய சம்மேளனங்களை புனரமைப்புச்செய்தல்.

★ செயற்படாமல் இருக்கும் 'லிப்கோ' அமைப்பை புனரமைப்பது.

★ உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் சங்கானை, வட்டுக்கோட்டை பகுதிகளில் அழிக்கப்பட்ட பாதீனியக் களையினை தொடர்ந்து முளைக்கவிடாமல் விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் மருந்து தெளிப்பது - என்பனவே இந்தத் தீர்மானங்கள் ஆகும். (எ-175)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் மால் போடக் கூடிய மரங்கள், ஓடுகள் மற்றும் கணனி, வயலின், மலோடிக்கா என்பன விற்பனைக்குண்டு. மாலை 3.00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். தொடர்பு: T.ஸ்கந்தராஜா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை (தபாற்கந்தோர் அருகிலுள்ள ஒழுங்கை). (24549)

மாசிவன் சந்தி கிழக்குப் பக்கமாக வீட்டுடன் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தியாகராசா சண்முகலிங்கம், 48, கந்தசாமி கோயில வீதி, வவுனியா. T.P.: 024-2221798 (காலை 9.00 - மாலை 6.00).(24512)

றொடா பிரின்ட் (Roto Print) R 45 K Automatic Offset Printing Machine விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777 396681. (C/31199)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, பெருங சந்தியில் இருந்து கிழக்குப் பக்கமாக 500 யார் தொலைவில் குறுக்கு வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செவ்வந்தி, இல.07, நவீன சந்தை, சாவகச்சேரி. (C/31206)

## சேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்துவாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விவரங்களுக்கு 0777 871617 தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

பாலா
தெஹிவளை.

## புறொயிலர் தேவை

இறைச்சிக்கோழி (புறொயிலர்) உடனதேவை. தொடர்பு: 94, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு (சட்டநாதர் கோயிலடிக்கும் - கல்வியங்காடு சந்திக்கும் இடையில்). (24541)

## வேலையாள் தேவை

ஆண் வயோதிபர் ஒருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை. தொடர்புகளுக்கு: இல.31, அரசடி வீதி (துட்டா தெரு சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (24536)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1978 இல் பிறந்த, மூல நட்சத்திரம், 2 இல் செவ்வாய் உள்ள A/L சித்தியுடன் தற்காலிகமாக ஆசிரியையாகக் கடமையாற்றும் மணமகளுக்கு சிறந்த நற்குணமுள்ள, பண்புள்ள, படித்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2091, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24560)

## Broiler குஞ்சு விநியோகம்

இன்று (10.11.2003) திங்கட்கிழமை தரமான Prima Broiler குஞ்சுகள் விநியோகிக்கப்படும். பதிவுசெய்தவர்கள் நேரில்வந்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: 77, கோவில் வீதி, யாழ்ப்பாணம். வடமராட்சியில்: சிவபாலன் கால்நடை வைத்தியசாலை முன்பாக. (24558)

# பனை வளத்தை பாதுகாக்க கரைச்சியில் பண்ணை

யாழ்ப்பாணம்,நவ.10

தால மூலவள அபிவிருத்தி நிறுவனம், கிளிநொச்சி மாவட்டத்தில் பனை வளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பாரிய பண்ணை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊற்றுப்புறம் பகுதியில் இப்பண்ணையை அமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் 10 ஏக்கர் நிலம் தால மூலவள அபிவிருத்தி நிலையத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படவுள்ள பண்ணைத் திட்டத்தின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார் என தால மூலவள அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் வி.கி.தங்கவேல் தெரிவித்துள்ளார்.

(எ-5)

# வாய்க்கால் வீதி திருத்த அனுமதி

வலிகாமம் தெற்கு,நவ.10

2003 ஆம் ஆண்டுக்கான கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சங்குவேலி, அந்திரான் வாய்க்கால், உடுவில் மத்தியில் விவசாயக்கிணறு மற்றும் குப்பிளான் தெற்கு, ஏழாலை மத்தி, புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஆகிய பகுதிகளில் வீதித் திருத்தங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வலி. தெற்கு பிரதேச சமுர்த்தி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆறு வீட்டு விற்பனை நிலையங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும், நடமாடும் சந்தைப்படுத்தல் சேவைக்கென ஒரு லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் - கூறினார்.

(எ-152)

## இன்றைய வெளியீடு

VCD SONG
திருமலை
புதிய MP 3
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்.
T.P.: 2884
(C-31210)

## Page Maker தெரிந்தவர் தேவை

விரைவாக தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

மருதம் பதிப்பகம்
நெல்லியடி,
கரவெட்டி.
(C/31212)(24-13-16-24)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட உயர்திரு.

**துரைச்சாமி குருநாதசிவம்**

அவர்கள் 06.11.2003 இல் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அவரை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம். இவர் றோயல் இன்டஸ்றீஸ் கொழும்பு தொழில் அதிபராகவும் யாழ்ப்பாணம் சிவா நறுமணப் பூங்கா உரிமையாளருமாக இருந்துகொண்டு புங்குடுதீவில் உள்ள பல ஆலயங்களுக்கும், சனசமூக நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் பல்வேறு தொண்டர் நிறுவனங்களுக்கும் மனந்தளராது பல உதவிகள் செய்வதுடன் ஏழைகளின் துயர்கண்டு அவற்றைத் தீர்ப்பதிலும் முன்னின்று உழைப்பவர். இத்தகைய பெருமகனுக்குக் கிடைத்த பட்டம் சமூகத்திற்கும் எமது மக்களுக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகக் கருதி அவருடைய சமூகசேவை மேன்மேலும் வளர்ந்து சிறப்புற்றோங்க புங்குடுதீவு பாணாவிடை சிவனை வேண்டுகிறோம்.

(சி-31208) (25-13-16-24)

- புங்குடுதீவு வாழ் மக்கள்.

# ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
11 - 11 - 1928



இறைவன் அடியில்
23 - 10 - 2002

**அமரர் கனகசபை பினாகபாணி**

(ஓய்வுபெற்ற அதிபர், யாழ். வண். சிறீ வைத்திலிங்க வித்தியாலயம்)

திதி: அபரபக்க துதியை

*ஆண்டு ஒன்று ஓடிச் சென்றாலும்*
*மாண்ட உன் நினைவு எம் மனதை விட்டகலாது*
*நீங்கள் விட்டுச்சென்ற வெற்றிடம் – அதனை*
*நிரப்பிட வழியின்றி திகைத்து நிற்கின்றோம்.*
*உமது நினைவு உயிர் உள்ளளவும் எம்மை விட்டகலாது.*

*62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (24468) (25-13-16-24)

உமது பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

**திருமதி அருள்மலர் இராஜசிங்கம்** (ஆசிரியை)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி அருள்மலர் இராஜசிங்கம் அவர்கள் கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற S.C.இராஜசிங்கத்தின் அன்பு மனைவியாவார். இவரது பூதவுடல் நல்லடக்க ஆராதனை 08.11.2003 சனிக்கிழமை வன்கூவர் கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.* (24561) (26-13-16-24)

தகவல்:
B.C.பாலசிங்கம்.

# 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 - 04 - 1918



மறைவு
10 - 11 - 2001

**மாணிக்கம் சீனியர்**

மரணம் எம்மைப் பிரிக்காதையா
மன்னவன் இயேசுவின் மகன் நீங்கள்
மத்திய வானத்தில் இயேசுவோடு
மறுருபமாய் கூடி மகிழ்ந்திடுவோம்.

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டைமனாறு.* (24556) (25-13-16-24)

- பிள்ளைகள்.

# நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலி

பிறப்பு
25 - 04 - 1925



இறப்பு
08 - 11 - 1995

**திருமதி கமலாம்பாள் சுந்தரமூர்த்தி**

(தொண்டைமானாறு)

அன்பின் திருவுருவாக பாசத்தின் பிறப்பிடமாக
குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்த அம்மா
பிரிவு என்னும் துயர் தந்து ஆண்டுகள் பலவானாலும்
ஒளி தரும் தீபமாய் எம்மோடு வாழும் உங்கள்
நினைவலைகள் என்றும் எம் நெஞ்சை விட்டு நீங்காது.
ஆத்மசாந்திக்காக ஆண்டவனை வேண்டும்:

(24476) (26-13-16-24)

*சுந்தரமூர்த்தி அன்சன்ஸ்,*
*20, ஆஸ்பத்திரி வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

## யாழ். ~ கொழும்பு மினிவான் சேவையில்

ஓராண்டு நிறைவில்



# மருதம் ரவல்ஸ்

நெ.ம.ம.வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி.

*ஓராண்டு நிறைவை இனிதாக்கிய வாடிக்கையாளர்களுக்கு நன்றியுடன் கூடிய நல்வாழ்த்துக்கள்!*

தங்கள் நல்ஆதரவுக்காக கொழும்பு பயணத்திற்கான ஒவ்வொரு பயணிகளுக்கும் பதிவினை எமது மருதம் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் பதிவுசெய்யும்போது 2004 ஆம் ஆண்டிற்கான அஷ்டலக்சுமி கலண்டர் (தினத்தாள் கலண்டர்) அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலும் இருவழிப்பயணத்திற்கான பதிவிற்கு விசேட கழிவுண்டு.

**மருதம் தொலைத்தொடர்பகம்**

நெ.ம.ம.வி. வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (சி-31211) (24-13-18)

021 2263210, 021 2263195, 060 2212229
0777 550966, 0777 550967, 0777 550968

# ஓர் எழுச்சிப் பாடகன் என்ற முறையில் விடுதலைக்கான பங்களிப்புத் தொடரும்



**'எழுச்சிப் பாடல்கள் பலவற்றை தனது இனிய குரலில் பாடி பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுத் திகழ்ந்துகொண்டிருப்பவர் பாடகர் ஜெயா. சுகுமார். 'உதயன்' கலைச் சுடர் பகுதிக்கு அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வி இது.**

***கேள்வி:*** உங்களைப் பற்றி...?

*பதில்:* எனது சொந்த ஊர் யாழ்ப்பாணம், சுண்டுக்குளி. அப்பா ஜெயசேகரம் ஒரு சங்கீத ஆசிரியர். எனது அண்ணன்மார் இருவரும் பிரபலமான பாடகர்கள்.

அந்த வகையில் எனது அப்பாவைப் போலவும் அண்ணன்மாரைப் போலவும், நானும் ஒரு பாடகனாக வரவேண்டும் என்ற ஆர்வம் சிறு வயது முதலே எனக்கு ஏற்பட்டது. என்னைப் பாடகனாக்க வேண்டும் என்பதில் எனது அப்பாவும் உறுதியாக இருந்தார். சிறுவயது முதல் எனக்குச் சங்கீதம் கற்றுக் கொடுத்தார். சிறு வயதில் பாடசாலையிலும் ஊரிலும் நடக்கும் நிகழ்ச்சிகளில் பாடுவேன். அப்போது எனக்கு கிடைக்கும் பாராட்டுக்களினால் தொடர்ந்தும் ஒரு பாடகனாக வரவேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது.

பின்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிய இசைக்குழுக்களில் பாடுகின்ற சந்தர்ப்பங்கள் எனக்குக் கிட்டின.

*கேள்வி:* புரட்சிப் பாடல்களைப் பாட ஆரம்பித்தது எப்போது?

*பதில்:* 1990களின் ஆரம்பத்தில். இங்கு இசைக்குழுக்களில் நான் ஓரளவுக்கு பலரது அபிமானம் பெற்ற பாடகனாகத் திகழ்ந்து கொண்டிருந்தேன்.

அப்போது சினிமா பாடல்களை விட தமிழீழ எழுச்சிப் பாடல்களையே அதிகம் விரும்பிப்பாடுவேன். அந்தக் காலப் பகுதியில்தான் யாழ். ரமணன் அண்ணாவின் இசை அமைப்பில் 'மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர்கள்...' என்ற பாடலை எனது சொந்தக் குரலில் பாடினேன்.

அந்தப் பாடலை கவிஞர் புதுவை அண்ணா எழுதியிருந்தார். அவருடைய உருக்கமான வரிகளும் அதற்கு சிறந்த முறையில் இசை அமைத்த ரமணன் அண்ணாவின் இசையும் எனது குரலை அழகுபடுத்தித் தந்தன.

அதன் மூலம்தான் தமிழீழ எழுச்சிப் பாடல்களுக்குள் புகுந்துகொள்ள முடிந்தது.

தொடர்ந்து இற்றைவரை பல எழுச்சிப் பாடல்களை நான் பாடியிருக்கிறேன். தமிழர் பெற்றுக்கொள்கின்ற ஒவ்வொரு போர் வெற்றிகளின் போதும் பாடல்களை பாடுகின்ற வாய்ப்புகள் கிடைத்தன.



## எண்ணங்களைப் பகிர்கிறார் பாடகர் ஜெயா. சுகுமார்

*கேள்வி:* போர் மிகவும் உச்சமாக நடைபெற்ற கடந்த ஏழு வருட வன்னி வாழ்வில் உங்களது பங்களிப்பு எப்படி அமைந்தது?

*பதில்:* தமிழர்களின் வாழ்வில் மறக்க முடியாத - உச்சக் கட்ட - போர் நடந்தது வன்னியில்தான். கடந்த 7வருடங்களாக பொருளாதாரத்தடை, மருந்துத்தடை போன்ற பல இக்கட்டான நிலைமைகளின் மத்தியிலும் எமது போராட்டத்தை சரிய விடக்கூடாது என்பதில் எமது தேசியத் தலைவரோடு போராளிகள், கலைஞாகள், பொதுமக்கள் அனைவருமே சேர்ந்து கடுமையாக உழைத்தார்கள்.

நாங்கள் இருக்க இடமின்றி மனைவி, பிள்ளைகளுடன் மரங்களுக்குக் கீழ் படுத்துறங்கிய துன்பகரமான நிகழ்வுகள் ஏராளம் இருக்கின்றன. எனினும் ஒரு பாடகர் என்ற வகையில் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கூட வன்னியில் பல்வேறு பகுதிகளிலும் சென்று இசை நிகழ்வுகளை நடத்தினோம். எத்தகைய நெருக்கடிகளுக்குள்ளும் எமது கலைகளை அழியவிடாது பாதுகாக்க வேண்டும் என்ற எமது தலைவரின் சிந்தனைக்கமைய தொடர்ந்தும் கலை நிகழ்வுகளை நடத்தினோம்.

தமிழனின் வீரத்தை முழுமையாக உலகறியச் செய்தது வன்னி மண்தான். அந்த வகையில் வன்னியில் ஒவ்வொரு வெற்றிக்கும் பாடல்களைப் பாடுகின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

*கேள்வி:* தேசியத் தலைவரிடம் விருது பெற்ற அனுபவங்கள் குறித்து..?

*பதில்:* அதனை நான் எனது வாழ்வில் கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்.

எமது தேசியத் தலைவர் கலைகளை வளர்க்கவேண்டும் என்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அந்த வகையில் கலைஞர்களாகிய எங்களை அழைத்து கௌரவித்தார். தலைவரைப் பற்றி ஒவ்வொருவரும் சொல்வதைக் கேட்டபொழுது அவரை ஒருதடவையாவது நேரில் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருந்தேன்.

**சந்திப்பு : சந்திரமதனா**

எனது ஏக்கத்துக்கு பயன் கிடைத்தது. தமிழீழ தேசியத் தலைவர் எம்மை ஒரு தடவை அழைத்து தனது கையால் பரிசு வழங்கினார்.

எங்களோடு அமர்ந்திருந்து உணவு அருந்தினார். தமிழீழ போராட்ட வரலாற்றில் கலைஞர்களின் பங்களிப்புக் குறித்து விரிவாக எங்களுக்கு விளக்கினார். அந்த அனுபவத்தை எம்மால் மறக்கவே முடியாது.

அதற்குப் பிறகும் சில தடவைகள் அவரைச் சந்திக்கின்ற வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் எனக்கு கிடைத்த பாக்கியமாகவே கருதுகிறேன்.

*கேள்வி:* அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்று நிகழ்ச்சிகளை நடத்தினீர்கள். அந்த அனுபவங்கள் குறித்து?


*பதில்:* என்னைப் பொறுத்தவரை வெளிநாட்டுப் பயணம் என்பது புதிய அனுவபம். முதன் முறையாக விமானத்தில் ஏறியதே ஒரு புதுமையான அனுபவமாகத்தான் இருந்தது. வெளிநாட்டுக்கு இசை நிகழ்ச்சிக்காக போய்க்கொண்டிருந்தபோது எமக்குள் பல்வேறு வகையான சிந்தனைகள் எழுந்தன. வெளிநாடுகளில் இருக்கும் எம்மவர்களின் பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள் சிந்தனைகள் யாவும் வெளிநாட்டவர்களைப் போலவே மாறி இருக்கும் என்ற நினைப்போடுதான் அங்கு சென்றோம்.

அதனால் தமிழீழ புரட்சிப் பாடல்களை மட்டுமின்றி பழைய சினிமா பாடல்களை சிலவற்றையும் பாடத் தயாராகவே போனோம். ஆனால் நாங்கள் நினைத்தது வேறு அங்கு நிகழ்ந்தது வேறு.

6 நாடுகளுக்குச் சென்றோம். அங்கெல்லாம் பல இசை நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

ஆனால், அங்கு எந்த சினிமா பாடல்களையும் பாடவேண்டாம். எமது பெருந்தலைவனைப் பற்றிப் பாடுங்கள். மாவீரச் செல்வங்களைப் பற்றி, மண்ணுக்காக போராடும் புலிகளைப் பற்றி, எமது தமிழ் மக்கள் படும்

(12ஆம் பக்கம் பார்க்க)




# ஆரிய இனவாதப் பிரசாரத்தால் சுயத்தை இழந்த சிங்கள இசை

## தமிழ் - சிங்கள கலைக்கூடலில் கலாநிதி சுனில் ஆதங்கம்

**ஒரே** பண்பாட்டின் அடித்தளத்திலிருந்து மொழி ரீதியாக முகிழ்த்தெழுந்த இரண்டு இனங்களுக்கிடையில் முரண்பாடுகளும், முட்டுக்கட்டைகளும் காலத்துக்குக் காலம் தோன்றி வலுவடைந்தமையால் தமிழ், சிங்கள இனங்கள் இரண்டும் பரமவைரிகள் ஆகின.

இராணுவத்தின் மிலேச்சத்தனங்களுக்கு ஊடாக சிங்கள மக்களைப் பார்த்த தமிழர்களும், விடுதலைக்காகப் போராடும் புலிகளின் போராட்ட வடிவங்களுக்கூடாகத் தமிழர்களைப் பார்த்த சிங்கள மக்களும் யுத்தம், இரத்தம், மரணம், ஓலம், கண்ணீர், வறுமை.... என நீளும் சுவடுகளில் கால் பதித்து நடந்து களைத்துப் போயினர்.

இந்த நிலையில்தான் கொழும்பு நகர மண்டபத்தில் தமிழ் - சிங்கள கலைஞர்கள் சமீபத்தில் ஒன்று கூடினர். கலாநிதி சுனில் விஜேசிறிவர்த்தனா அந்த தமிழ், சிங்கள கலைக்கூடல் நிகழ்வில் தனது ஆதங்கத்தை வெளிப்படையாக வார்த்தைகளால் கொட்டி நின்றார். அவரது ஆதங்கம் நிறைந்த வார்த்தைகள் இங்கு.....

### தொன்மை

தமிழர்களின் இசைக்கும் சிங்கள மக்களின் இசைக்கும் உள்ள பிரிக்கமுடியாத உறவினை தொன்மையான கிராமியப் பாடல்களிலிருந்து அறிந்துகொள்ளமுடியும். கிராமியப் பாடல்களை ஆய்வு செய்தபோது சிங்களவர்களின் மத்தியில் பாடப்பட்ட தொழில் மற்றும் உழைப்புப் பாடல்களுக்கும் தென்னிந்தியாவில் கிராமப்புற தமிழர்களால் பாடப்பட்ட தொழில் மற்றும் உழைப்புப் பாடல்களின் இசை வடிவங்களுக்கிடையே நெருங்கிய ஒற்றுமை இருந்திருக்கின்றது. ஏனெனில் இலங்கையின் வடக்குப் பகுதியில் வாழ்ந்தவர்களுக்கும் தென்னிந்தியர்களுக்குமிடையில் நெருங்கிய உறவு இருந்து வந்துள்ளது. விவசாய நிலங்களை அண்டி வாழ்ந்த அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளும், பழக்கவழக்கங்களும் எதிர்பார்ப்புகளும் அநேகமாக ஒன்றாகவே அமைந்திருந்தன. அதனால் தென்னிந்திய கிராமப்புற இசைவடிவங்கள் இயல்பான பின்பற்றல்களுக்கு உள்ளாயின.

இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த அதே மக்களிடம் கர்நாடக சங்கீதத்தன்மை கொண்ட பாடல்களும் பாடப்பட்டுள்ளமையை பிரித்தானியர்களின் ஆட்சிக்கால ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சியான தென்னிந்திய இசைச் செல்வாக்கினை இந்த மக்கள் அனுபவித்து வந்துள்ளார்கள்.

கண்டிய காலத்தில் அரச சபைகளில் ஆடப்பட்டுவந்த கண்டிய நடனம் 18வண்ணங்களைக் கொண்டது. தற்போது இவை 28 வகைகளாக விரிவடைந்துள்ளன. இவற்றில் தென்னிந்திய இசையோடு சேர்ந்த இசை பேணப்பட்டு வருகின்றது. சில இசை வடிவங்கள் தமிழநாட்டு இசை வடிவங்களை ஒத்தவகையில் அமைந்துள்ளன.

### வடஇந்திய செல்வாக்கு

இவ்வாறாக தமிழ் நாட்டு இசையின் செல்வாக்கால் வளர்ச்சி பெற்று வந்த சிங்கள மொழி பேசும் மக்களின இசை வடிவங்களுக்கு வேட்டு வைக்கும் வகையில் வட இந்திய இசை இலங்கையில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது.

பிரித்தானியர் காலத்தில்தான் வட இந்திய இசையின் செல்வாக்கு இலங்கையில் பரவத்தொடங்கியது. டில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்து அதிகரித்தமையினாலும் சிங்கள மக்கள் ஆரிய வழித்தோன்றல்கள் என்ற பிரசாரத்தின் வேகத்தினாலும் இலகுவாக வட இந்திய இசையை ரசிக்கவும் அதனைத் தமது இசையெனக் கொள்ளவும் சிங்கள மொழிபேசும் மக்கள்



தலைப்பட்டனர். இதனால் தொன்மையான தமது இசையான தென்னிந்திய இசை வடிவங்களை மாற்றி அமைக்கவும் கைவிடவும் அவர்கள் பழகிக் கொண்டனர்.

### ஆரிய முதன்மை

இந்தக் கால கட்டத்தில்தான் மொழி ரீதியிலான ஆய்வுகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த ஜேர்மன் அறிஞரான மக்ஸ் முல்லர் ஆரிய இனத்தையும் ஆரிய மொழிக் குடும்பத்தையும் முதன்மைப்படுத்தினார். வட இந்திய இசையின் மீது நாட்டம் கொண்டிருந்த சிங்களமொழி பேசும் மக்கள் இத்தகைய கருத்துக்களின் பால் மேலும் ஈர்க்கப்பட்டனர்.

தொடர்ந்து வந்த காலகட்டத்தில் ஆரிய இனவெறியும், இரத்த வெறியும் கொண்டு யூதர்களை அழித்து வந்த கொலைவெறி பிடித்த ஹிட்லரின் போர்ச் 'சாதனைகளை' பல வகையிலும் போற்றுவதற்கு சிங்கள மொழிபேசும் மக்களின் சில கூட்டத்தினர் முனைப்போடு செயற்பட்டனர். அந்த வகையில் கொழும்பை மையமாகக்கொண்டு வெளிவந்த 'வீரன்' என்ற சிங்கள மொழிப் பத்திரிகை ஹிட்லரின் சாதனைகளைப் புகழ்ந்து பல வகையிலும் எழுதியது. இந்த பிரசாரத்தின் மூலம் சிங்களமொழி பேசும் மக்களும் ஆரியர் வழித்தோன்றல் என்ற தவறான கருத்து மக்கள் மத்தியில் புகுத்தப்பட்டு வளர்க்கப்பட்டது. இவ்வளர்ச்சி நிலையில்தான் தென்னிந்திய இசை வடிவங்கள் குறிப்பாக தமிழர்களின் இசை வடிவங்கள் அதன் பாவனை சிங்கள மொழி பேசும் மக்களிடம் அற்றுபோகலாயிற்று.

கண்டிய காலத்தில் கூட, தனித்துவமான இசை வடிவத்தைக் கொண்டிருந்த சிங்கள மொழி பேசும் மக்களின் பூர்வீகம் தொடர்பாக குழப்பமான நிலை ஒன்று உருவாக்கி வளர்க்கப்படலாயிற்று இந்த நிலையில் -

சிங்கள மொழிபேசும் பல இசை விற்பன்னர்கள் தமது தனித்துவமான இசை எதுவெனத் தேடிச் செல்லலாயினர். சென்றவர்களும் வட இந்தியாவிற்கே சென்றனர். அங்கு வங்காளத்தில் அமைந்துள்ள 'சாந்தி நிகேதனில்' இசையைக் கற்றார்கள். சிங்கள இசை பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். அவர்கள் வட இந்திய இசைதான் சிங்கள மொழிபேசும் மக்களின் பூர்வீக இசை என்ற அளவுக்கு பின்னர் கருத்துக்களைப் பரப்பினர்.

### இசையின் பூர்வீகம்

எனினும், இசை தொடர்பான ஆழ்ந்த புலமை கொண்ட 'சுனில் சாந்த' போன்றவர்கள் பல்வேறு முயற்சிகள் மூலமும் தென்னிந்திய இசை வடிவங்களே தொன்றுதொட்டு இலங்கை மக்களின் இசை வடிவங்களாக இருந்து வந்துள்ளன என்பத்தனை நிரூபிக்க முயன்றபோதும் ஏனையோரின் தடைகளால் அவை கருத்தில் எடுக்கப்படாது ஒதுக்கி விடப்பட்டன.

**- சத்தியன் -**

இத்தகைய குழப்பமான நிலையினை உணர்ந்தவர்களாக சிங்கள இசை எது? என்று தேடும் அளவுடன் 1980களின் பின்னர் தென்னிந்திய இசையின் தேடல்கள் அதிகரித்தன. அந்த இசையை சிங்கள கலைஞர்கள் பலர் சுவைக்கத் தொடங்கினர். தற்போது இசை வணிகமயப்படுத்தப்படுவதால் சிங்கள இசையில் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் ஏற்கனவே, தனித்துவமற்றிருந்த சிங்கள இசை இப்போது மேலும் குழப்பமான நிலைக்கு மாறி வருவதனால் இருக்கின்ற மிச்ச சொச்ச இசை வடிவங்களும் அழிந்துவிடுமோ என்ற பயத்தினால் பல இசை அறிஞர்கள் சிங்கள மொழி பேசும் மக்களின் இசையின் மூலத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் நோக்கில் தென்னிந்தியா நோக்கி மீண்டும் படையெடுக்கத் தொடங்கி உள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் கலாநிதி சுனில் விஜேசிறிவர்த்தனா. ★

## அழகுக் கலை பயிற்சி வகுப்புகள்

நீங்கள் அழகுக் கலையில் நிபுணராக வர விரும்புகிறீர்களா?
இதோ! உங்களுக்காகவே ஆரம்பமாகின்றன!

★ 12 வகையிலான Facials
*(மூன்று நாள் பயிற்சி வகுப்பு)* ரூபா 2,500/-

★ சிகை வடிவமைப்பு Diploma in Hair Styling & Bridal Dressing - மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை
*(நான்கு மதத்தவர்களுக்கான)* மூன்று நாள் பயிற்சி வகுப்பு ரூபா 2,500/-

★ Diploma in Bridal Dressing & Beauty Culturel and Hair Styling ரூபா 10,000/-
Purming, Straightling உட்பட இன்னும் பல விடயங்கள்
*(எட்டு நாள்கள் பயிற்சி வகுப்பு)*

எதிர்வரும் (13.11.2003) வியாழன் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
தொடர்ந்து 21.11.2003 வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.



- ★ *Saree Graping*
- ★ *Pottery Painting*
- ★ *Cake Icing*
- ★ *Costume Jewellary Making*
- ★ *Christal Ornaments Making*
- ★ *Fabric Painting*
- ★ *Glass Painting*
- ★ *Ceramic Painting*
- ★ *மீன் செதில் கை வேலை*
- ★ *Bauquet Making*
- ★ *Flower Arrangement (Natural & artifical)*
- ★ *Cookery (Chinese)*
- ★ *Pizza, Pastry Making*

அமர்வின் முதல் நாளிலேயே கற்கை நெறிக்கான முழுக்கட்டணமும் செலுத்தப்படவேண்டும்.

★ பதிவுகள் யாவும் 'உதயன்' பணிமனையில் செய்துகொள்ளலாம்.
★ வகுப்புகள் இல. 23, 4th Lane, Brown Road
*(யாழ். இந்து மகளிர் கல்லூரி பின்புறம் - சிவா அரிசி ஆலை அருகில்.)*

அழகுக்கலை நிபுணர்
**திருமதி மிதுனா ஆனந்தரமணன்**
Dip.in Cosmetology Bridal Dressing, Hair Dressing, Cum Therapast (India & Sri Lanka)

026 222 4524
077 616 7729

(சி-31150) (31-11-18-)


# தமிழீழ விளையாட்டு விழா அடுத்த ஆண்டு பெப்ரவரியில்
## கிளிநொச்சியில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,நவ.10

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் வருடாவருடம் நடத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவின் 3ஆவது தேசிய பெரு விளையாட்டு விழா அடுத்த வருடம் பெப்ரவரியில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடத்தப்பட்ட 2ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. ஆனால், அடுத்துவரும் ஆண்டு நடைபெறும் போட்டியில் மேற்படி போட்டிகளுடன் கிளித்தட்டு, கபடி மற்றும் பெண்களுக்கான கரபந்தாட்டம் என்பனவும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

கேணல் சங்கர் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் கிரிக்கெட் போட்டிக்கு தமிழீழ வைப்பகமும் லெப்.கேணல் விக்ரர் நினைவான உதைபந்தாட்டத்திற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் மேஜர் அல்பேட் ஞாபகார்த்த கரபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு நிமலன் புகைப்பட கலையகமும் மேஜர் சோதியா ஞாபகார்த்த வலைப்பந்தாட்டத்திற்கு ஈழநாதம் பணிமனையும் அனுசரணை வழங்கி வருகின்றன.

புதிதாக சேர்க்கப்பட்ட லெப். கேணல் புலேந்தி அம்மான் ஞாபகார்த்த ஆண்களுக்கான கிளித்தட்டு, மேஜர் அன்பரசி ஞாபகார்த்தமாக பெண்களுக்கான கிளித்தட்டு, லெப்.கேணல் சந்திரன் ஞாபகார்த்த ஆண்களுக்கான கபடி, கப்டன் திலகா ஞாபகார்த்த பெண்களுக்கான கபடி மற்றும் லெப். சதா ஞாபகார்த்த பெண்களுக்கான கரபந்து ஆகிய போட்டிகளுக்கு அனுசரணை வழங்க விரும்புபவர்களை தம்முடன் உடனடியாக தொடர்புகொள்ளுமாறும் - தொலைபேசியில் தொடர்புகொள்ள விரும்புவோர் 021 222 5715 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - தமிழீழ விளையாட்டுத் துறையினர் கேட்டுள்ளனர். (எ-5)

## பரிசில் தினம்

யாழ் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எம்மரேஜ்திரன தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார். (எ-8)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் திரு.மா.சண்முகரத்தினம் அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி மாரிமுத்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கத்தினர்,
யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை,

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவுக் கண்ணீர்ப்பூக்கள்

மண்ணுலகில் 25 - 04 - 1946



விண்ணுலகில் 11 - 10 - 2003

## அமரர் சூசைப்பிள்ளை மார்க்கு(தங்கம்)

(உரிமையாளர், கௌரி கபே - குருநகர்)

*எங்கள் அன்பின் தந்தையே!*
*ஆசையாய் வளர்த்த பிள்ளைகள் நாம்*
*ஆதரவின்றித் தவிக்கின்றோம்!*
*உற்ற துணைவியும் துணையிழந்த கதியிங்கே*
*பாசமுடன் வளர்ந்த சோதரரும் சோகத்தில்*
*தவிக்கவிட்டு நாள்கள் முப்பத்தொன்று ஆனதிங்கே*
*மனங்களில் நிறைந்திருக்கும் மருமக்களின்*
*கண்ணீர்க் காணிக்கையை உம் திருவடியில்*
*காணிக்கையாக்குகின்றோம்.*

இல.41, புதிய பூங்கா வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (24565)(22-11-16)

தங்களின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.


மங்களகரமான ஆரம்ப வைபவத்துக்கு வாழ்த்து

YAMAHA மோட்டார் சைக்கிள்
விற்பனையாளர்களான
இல. 298, காங்கேசன்துறை வீதியில் அமைந்திருக்கும்

YAMAHA PLAZA
T.P. 0777 198000

ஸ்தாபனத்தினரை நன்கு வளம்பெற்று உயரவேண்டும் என்று நாம் உளமார வாழ்த்துகின்றோம்!

Castrol
World's No.1 Engine Oil

எமது சேவையும் தற்போது யாழ்ப்பாணத்தில் YAMAHA PLAZA உடன் இணைந்து ஆரம்பமாகியுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

(C?3218) (22-11-18)

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"




## சிற்றுண்டிச்சாலை

ஈழப்பழந்தமிழர் கலாசாரக் கட்டடத் தொகுதியில் முற்றிலும் மேற்கத்தைய பாணியில் உணவுச்சேவை

இடம்:- **"சிவகாமி விலேஜ்"**
வண்ணம்சீமா, அல்வாய் தெற்கு, வதிரி.

காலம்:- **10.11.2003 திங்கள் மாலை 6.00 மணி**

*(தொடர்ந்து சனிக்கிழமை தோறும் மாலை 6.00 மணியிலிருந்து 11.00 மணிவரை திறந்திருக்கும்)*

திறந்து வைப்பவர்:- **திரு.இ.தயா** அவர்கள்
*(அரசியல்துறைப் பொறுப்பாளர் - வடமராட்சி)*

மங்கள விளக்கேற்றுபவர்:- **திரு.சி.நகுலேஸ்வரன்** அவர்கள்
*(பொதுச்சுகாதாரப் பரிசோதகர் - அல்வாய் தெற்கு)*

முதல் வியாபாரம்:- **அன்னை, சம்பந்தநாதன், கனகரத்தினம்**

சிறப்பு விருந்தினர்:- **திரு.க.பாரிவள்ளல்** அவர்கள்
*(பிரபல வர்த்தகர் - வடமாகாணம்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*புகைத்தல், மதுவகை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.*

(24562) (26-13-16-24) - நிர்வாகம்

சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் உங்கள் நிகழ்ச்சிகள் (பிறந்தநாள், வரவேற்புகள், ஆண்டு விழா) எதுவாயினும் எமது நிலையத்தில் நீங்கள் கொண்டாடலாம். விவரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இல.: 0776172837

# மரண அறிவித்தல்கள்

## குணரட்ணம் குணநாதன் (குரு)

*(முன்னாள் உதவி முகாமையாளர், மக்கள் வங்கி – இரத்மலானை கிளை)*

யாழ். கலட்டியைப் (வண்ணார்பண்ணை) பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை (உருத்திரா மாவத்தை, 60 - 3/2) வசிப்பிடமாகவும் கொண்ட மக்கள் வங்கி - இரத்மலானை கிளையின் முன்னாள் உதவி முகாமையாளர் குணரட்ணம் குணநாதன் (குரு) சனிக்கிழமை (08.11.2003) மாலை காலமானார்.

அன்னார் சடாட்சரயோகினி அவர்களின் அன்புக் கணவரும் ஜனகர் மற்றும் கிருஷ்ணசாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குணரட்ணம் - சொர்ணம்மா ஆகியோரின் புதல்வரும் காலஞ்சென்ற V.யோகீஸ்வரி, காலஞ்சென்ற யோகீஸ்வரன் மற்றும் ஸ்ரீதரன் V.K.திராகவி ஆகியோரின் சகோதரனும் திருமதி ராஜலஷ்மி ஞானசேகரத்தின் மருமகனும் கந்தஞானி, J.பாலயோகினி, R.குமாரயோகினி, R.சண்முகயோகினி மற்றும் குகஞானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2003) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஜயரட்ன மலர்ச்சாலையில் இடம்பெற்று, பிற்பகல் 2 மணியளவில் கனத்தை பொதுமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 072 2976322.

தகவல்:
மனைவி. திருமதி ச.குணநாதன்.

(சி-31217) (25-13-16-24)

## திருமதி
## சரவணமுத்து சின்னத்தங்கம்

மடத்தடி கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சரவணமுத்து சின்னத்தங்கம் அவர்கள் 07.11.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சரவணமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் சிவநந்தினி (நோர்வே, முன்னாள் ஆசிரியர் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), நந்தகுமார் (ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), சிவானந்தி, ஆனந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவபாலன் (நோர்வே), பானுகோபன் (லண்டன்), சிவகிரிசா ஆகியோரின் மாமியாரும் வைஸ்ணவி, வைசாந் ஆகியோரின் பேர்த்தியும் யோகலிங்கம், கனகலிங்கம், நாகம்மா, இரத்தினம், திலகவதி, காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பொன்னம்மா, முத்துவேலு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2003) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி கிழக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
ச.நந்தகுமார்
(மகன்).

(சி/31216) (26-13-16-24)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3110666 இருந்து
3123339 வரை
சீட்டிழுப்பு இல. 1451
திகதி 08.11.2003



## வெற்றி எண்கள்

**01 20 48 51 57**

போனஸ் எண் **37**

## ஜக்பொட் பரிசு
**ரூபா.3,230,650/-** வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,230,650/- | 3,230,650/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 71 | 10,000/- | 710,000/- |
| 3 | 4,039 | 500/- | 2,019,500/- |
| 2 | 65,506 | 20/- | 1,310,120/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 80,912 | 10/- | 809,120/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,379,390/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.1,500,000/-**

தொடர் இல. 2153219க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 12ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3115213-1-23**
**3113039-2-37**
**3111694-7-70**
**3111146-9-42**
**3118371-9-96**

PHOENIX O&M

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 524 |
| திகதி | 07.11.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
**5300837-5314981**

வெற்றி இலக்கங்கள் **27 35 40 42**

லக்கினம்
கடகம்



**ஜக்பொட் பரிசு**
**ரூபா. 2,489,850/-**
**வெல்லப்படவில்லை.**

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **3,176,400/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 307,632 | 10 | 3,076,320 |
| 2 இலக்கங்கள் | 28,118 | 20 | 562,360 |
| 1 இல + லக்கினம் | 27,914 | 30 | 837,420 |
| 2 இல + லக்கினம் | 2,582 | 100 | 258,200 |
| 3 இலக்கங்கள் | 751 | 500 | 375,500 |
| 3 இல + லக்கினம் | 61 | 5,000 | 305,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,489,850 | - |
| மொத்தம் | 367,063 | - | 5,914,800 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **5,914,800/-**

தொடர் இல. 4324618க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5303913-2-05**
**5304250-5-06**
**5304727-4-08**
**5301368-5-54**
**5303262-9-82**

PHOENIX O&M

# நாம் மக்கள் மத்தியில்தான் உள்ளோம்; வதந்திகளால் குழம்பத் தேவையில்லை!

## யாழ். மாவட்ட விளையாட்டுப் பொறுப்பாளர் உரை

வலி.வடக்கு,நவ.10

நாம் மக்கள் மத்தியிலேயே தொடர்ந்து நிற்கின்றோம். ஆகவே வதந்திகளைக் கேட்டு எவரும் வீணாகக குழப்பமடையத் தேவையில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் மாதுளன்.

பிரபல சைக்கிளோட்ட வீரரும், உதைபந்தாட்ட மத்தியஸ்தருமான அமரர் செல்வராசாவின் முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி நடத்தப்பட்டவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மாதுளன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகங்களுக்கு மக்கள் நாளாந்தம் அதிகளவில் வந்து செல்கின்றனர். நாங்கள் இங்கு இருக்கின்றோமா? இல்லையா? என்பதைப பார்க்கவே அவர்களில் அநேகர் வருகி...ள். இந்த நிலைமை உருவா...ரணம், தென்னிலங்கை யில் கடந்த சில நாள்களாக ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களே காரணமாகும்.

போரை எப்படி வழிப்படுத்தி நடத்த வேண்டும் என்பதை நாம் நன்கு அறிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தவர் சந்திரிகா அம்மையார் ஆவார். அதேபோன்று உலக நாடுகளிலுள்ள நவீன ஆயுதங்களை எமக்களித்து, போரை மேற்கொள்ளச் செய்தவரும் அவரே ஆவார்.

கடந்த சுமார் 21 மாத காலமாக போர் இன்றி ஓரளவு நிம்மதியான சந்தோசக் காற்றை சுவாசிக்கக்கூடிய நிலைமை காணப்பட்டது. ஆனால், சந்திரிகா அம்மையாரின் திடீர் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக என்ன நடக்கப் போகின்றதோ? என மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்களும், சந்தேகங்களும் எழுந்துள்ளன.

அரசு தரப்பினரோ அல்லது சந்திரிகா அம்மையாரோ இனி எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்? என்று எமக்குத் தெரியாது. ஆனால், எதனையும், எத்தகைய வடிவத்திலும் எதிர்கொள்ளவும், ஏற்கவும் நாம் தயாராக உள்ளோம்.

இந்த நிலைமையில் நாங்கள் மக்கள் மத்தியில்தான் நிற்கின்றோம். ஆகவே, வதந்திகளைக் கேட்டு எவரும் குழம்பத் தேவையில்லை. இதே சமயம் தென்பகுதி அரசியல் நிலைப்பாடுகளை அக்கறையுடன் நமது மக்கள் அவதானிக்க வேண்டியது அவசியமாகும் என்றார் மாதுளன்.

(ஒ-86)

# இளைஞர் கும்பல்களின் சேஷ்டை சாவகச்சேரியில் அதிகரிப்பு!

தென்மராட்சி,நவ.10

சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவில் வீதியில் இளைஞர் கும்பல் ஒன்றின் அட்டகாசம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கபபட்டது.

இவ்வீதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்கு சென்று வரும மாணவிகளை இந்த இளைஞர்கள் படுமோசமாகக் கிண்டல் செய்வதாகவும் -

இதனைத் தட்டிக்கேட்க முனைவோரை அக்கும்பல் தாக்க முற்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி கற்குளி கந்தசாமி கோவிலுக்கு முன்பாக உள்ள பற்றை மறைவில் கூடும் மற்றோர் இளைஞர் கும்பல் அவ் வீதி வழியாகச் செல்லும் யுவதிகள் மற்றும் மாணவிகளுடன் அருவருக்கத தக்க வகையில் சேஷ்டைகள் புரிவதாகவும் -

அப்பற்றை மறைவில் ஒளிந்திருந்து கள் மற்றும் மது அருந்தும் கும்பலே இவ்வாறு நடந்து கொள்வதாகவும் - அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(ஒ-117)



அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 102ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை காங்கிரஸ் கட்சியின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் உருவப்படத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சித் தலைவருமான அ.விநாயகமூர்த்தி மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# மழைச் சகதி சறுக்கியதால் மோட்டார் சைக்கிள் விபத்து!

யாழ்ப்பாணம்,நவ.10

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மழைச் சகதியில் சறுக்கியதால அதனைச் செலுத்தி வந்த இளைஞர் காயம அடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு கச்சாய் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. இதில் கொடிகாமத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவரே முகம் மற்றும் கைகால்களில் காயம் அடைந்தார். காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

(ஒ-6)

# வடக்கில் மட்டும் நஷ்டஈடு வழங்க சுமார் 185 கோடி ரூபா தேவை!

## புனர்வாழ்வு அமைச்சு கூறுகிறது

யாழ்ப்பாணம்,நவ.10

கடந்த கால யுத்தங்களினால் வட பகுதியில் பாதிப்படைந்தோருக்கு நஷ்டஈடு வழங்க சுமார் 185 கோடி ரூபா தேவைப்படுகிறது. இவ்வாறு புனர்வாழ்வு, அகதிகள், மீள்குடியமர்வு அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போரினால் சொத்துக்களை இழந்தவர்கள், காயமடைந்தோர், குடும்பத் தலைவரை இழந்தோர் என பல்வேறு தரப்பினரும் நஷ்டஈடு கோரி அமைச்சுக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். இந்த வகையில் சுமார் 17ஆயிரத்து 700விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த விண்ணப்பதாரிகள் கோரியுள்ள நஷ்டஈட்டுத் தொகைகளை வழங்க சுமார் 185கோடி ரூபா தேவைப்படுகிறது. இந்தத் தொகையை வழங்குமாறு திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-4)

# உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவு குறித்து கல்வி அமைச்சு அறிவுறுத்து

திருகோணமலை,நவ.10

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் வலயக் கல்வி அலுவலகங்களில் உதவிக் கல்வி பணிப்பாளர்களை நியமிக்கும் போது பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்படவேண்டும் என்றும் -

பின்னர் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் கூடிய புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு மட்டுமே உதவிக் கல்விப்பணிப்பாளர் நியமனங்கள் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் -

உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனங்களின்போது சேவை மூப்பு தரம் மற்றும் தகைமைகள் உள்ளோர் பாதிக்கப்பட்டுள்ளதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

இந்த நிலைமைகளை கருத்தில் கொண்டு இனிவரும் காலங்களில் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் நியமனங்கள் வழங்கும்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெறுபவர்களுக்கு மட்டுமே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் - என்று அதில் உள்ளது.

இதற்கான புள்ளி திட்டம் ஒன்றையும் மாகாண கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

(எ-7)

# சங்கானை ஆயுர்வேத ஆஸ்பத்திரியை மீள இயங்க வைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.10

சங்கானை உப அலுவலகத்தில் இயங்கி வந்த ஆயுர்வேத ஆஸ்பத்திரியை மீண்டும் இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சங்கானை பகுதி பொதுமக்கள் சார்பில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பல்வேறு தரப்பினருக்கும் மகஜர்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆதரவுடன் வட்டுகோட்டை, சுழிபுரம் மற்றும் சங்கானை ஆகிய இடங்களில் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள் செயற்பட்டு வந்தன.

இதனால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்கு அருகில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வந்தனர்.

ஆனால், நீண்டகாலமாக சங்கானை உப அலுவலகத்தில் செயற்பட்டு வந்த ஆஸ்பத்திரி கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சங்கானைப் பகுதி மக்கள் தற்போது சிகிச்சை பெறுவதில் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். அதுமட்டுமன்றி, ஆயுர்வேத சிகிச்சையைப் பெறுவதற்காக சுழிபுரம், வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் இயங்கும் ஆஸ்பத்திரிகளுக்கு செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, சங்கானை வாழ் மக்களின் சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு சங்கானை உபஅலுவலகத்தில் முன்னர் இயங்கிய ஆயுர்வேத ஆஸ்பத்திரியை மீள் இயக்க ஏற்பாடு செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-6)

# ஜீ.ஜீ.பொன்னம்பலம் பிறந்ததினம் அனுஷ்டிப்பு

குருநகர்,நவ.10

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 102ஆவது பிறந்ததினம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரால் அனுஷ்டிக்கப்பட்டது.

முதலில் குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது. அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவரும், எம்பியுமான அவிநாயகமூர்த்தி முதலில் மலர்மாலை சூட்டினார். அதனைத் தொடர்ந்து கட்சியின் பிரமுகர்கள் மலர்மாலை சூட்டினர். இந்நிகழ்வு காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து 3ஆம் குறுக்கு வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் பிறந்த நாள் நினைவு உரைகள் நடைபெற்றன.

(எ-51)

# தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவில் மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

## 13ஆம் திகதி வழங்க ஏற்பாடு

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள குழந்தைகளுக்கு இரண்டாம் கட்டமாகவும் ஜப்பான் மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை இப்பகுதியில் உள்ள மத்திய மருந்தகங்களில் வைத்து தடுப்பூசி ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் 3 ஆம் திகதி முதற்கட்டமாக இத்தடுப்பூசி ஏற்றப்பட்டபோது பலர் தமது குழந்தைகளுக்கு மேற்படி மருந்தைக் கொடுக்கத் தவறிவிட்டனர் எனக் கூறப்பட்டது.

2000ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம திகதியில் இருந்து 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி வரையான காலத்தில் பிறந்த சகல குழந்தைகளுக்கும் இத்தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது அவசியம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்களின் விவரம் வருமாறு:-

★ தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம் - தெல்லிப்பழை மல்லாகம் பகுதி மக்களுக்கு.

★ ஏழாலை மத்திய மருந்தகம் - ஏழாலை பகுதி மக்களுக்கு.

★ புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம் - புன்னாலைக் கட்டுவன், குப்பிளான் பகுதி மக்களுக்கு.

★ உடுவில் மத்திய மருந்தகம் - உடுவில், மருதனார்மடம் பகுதி மக்களுக்கு

★ இணுவில் மத்திய மருந்தகம் - இணுவில் பகுதி மக்களுக்கு

★ அளவெட்டி மத்திய மருந்தகம் - அளவெட்டி, பன்னாலைப் பகுதி மக்களுக்கு.

சுன்னாகம் மத்திய மருந்தகம் - சுன்னாகம் கந்தரோடை பகுதி மக்களுக்கு.

(எ-152-150)

# ஓர் எழுச்சிப் பாடகன்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவலங்களைப் பற்றிப் பாடுங்கள் என்று அங்குள்ள எமது மக்கள் கூறினார்கள். அது எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவர்கள் அப்படிக் கூறியதும் எமது கலைஞர்கள் அனைவருக்கும் உற்சாகம் மேலிட்டது.

அனைவரும் தமது திறமைகளை உச்சமாக வெளிப்படுத்தினார்கள். ஒவ்வொரு நாடுகளுக்கும் நாங்கள் சென்றபோது அங்கு எமது மக்கள் எங்களை சிறப்பாக வரவேற்று உபசரித்தார்கள்.

எமது பண்பாடுகள், கலாசாரம் என்பவற்றை அங்கும் அவர்கள் சிறப்பாக பின்பற்றி வருவதைக் காணக்கூடியதாக இருந்தது.

*கேள்வி:* புரட்சிப் பாடல்களைப் பாடும்போது எத்தகைய மன உணர்வு ஏற்படும்?

*பதில்:* இதுவரை பல பாடல்களை நான் பாடியுள்ளேன். ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு விதமான மன உணர்வு எனக்குள் ஏற்படும்.

கடந்த காலங்களில் - குறிப்பாக வன்னியில் வாழ்ந்த காலங்களில் நாங்கள் அனுபவித்த துன்பதுயரங்கள் மற்றும் அவற்றுக்கு மத்தியில் பெற்ற வெற்றிகளின் சந்தோசங்கள் என்பன மாறிமாறி ஏற்பட்ட வண்ணமே இருந்தன.

எனவே, ஒருபுறம் அவலமான - துன்பகரமான வாழ்க்கை வாழ்ந்தாலும் மறுபுறம் எமது மண்ணில் சுதந்திரமாக - தலைநிமிர்ந்து - எந்த நேரத்திலும் உலாவி வரக்கூடிய நிம்மதியான வாழ்வு எமக்கு கிடைத்தது.

எவருக்கும் அடிமைப்படாத தலைநிமிர்ந்த வாழ்வு எமக்கு திருப்தியையே தந்தது. இத்தகைய மாறுபட்ட உணர்வுகளுக்கு ஊடாக நாங்கள் ஒவ்வொரு பாடல்களையும் பாடினோம்.

சிலவேளைகளில் நான் ஒலிப்பதிவுக்காக பாடும்போது எனக்குள் உணர்வுகள் எதுவும் ஏற்படாவிட்டாலும், பின்னர் அந்தப் பாடல்களை நானே கேட்கின்றபோது எங்களை அறியாமலேயே ஒருவித உணர்வு வெளிப்பாடு எழுவதை உணரமுடியும்.

*கேள்வி:* கலைஞர் என்ற வகையில் விடுதலைப் போராட்டத்திற்கு உங்களது பங்களிப்பு எப்படி அமைந்தது? எதிர்காலத்தில் எப்படி அமையப் போகின்றது?

*பதில்:* போராட்டத்துக்கு பெரிதாக எந்தப் பங்களிப்பையும் செய்ததாக நான் நினைக்கவில்லை. ஒவ்வொரு தமிழனும் செய்கின்ற - செய்ய வேண்டிய கடமையைத்தான் நானும் செய்திருக்கிறேன் - செய்து கொண்டிருக்கிறேன். போராட்டத்துக்கு பங்களிப்பு செய்வதென்பது போராளிகள், கலைஞர்களுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு தமிழ்பேசும் மக்களுக்கும் உரிய இன்றியமையாத பொறுப்பும் கடமையும் என்பதே எனது கருத்து.

எமது தலைவரின் வழிகாட்டலில் தமிழ்மக்கள் தமது பங்களிப்பை வழங்குவதன் மூலமே உரிமைகளை விரைவில் வென்றெடுக்கமுடியும்.

நானும் ஒரு பாடகன் என்ற வகையில் தொடர்ந்தும் விடுதலைப் போராட்டத்துக்கு என்னால் இயன்ற பங்களிப்பை வழங்கிக்கொண்டேயிருப்பேன்.

★

# ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி!

யாழ்ப்பாணம்,நவ.10

பிரபல சைக்கிளோட்ட வீரர் அமரர் செல்வராஜா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

நேற்றுமுன்தினம் சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும், அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் மோதின.

ஐந்து சுற்றுக்கள் என்று நிர்ணயிக்கப்பட்ட இறுதியாட்டம் காலநிலை காரணமாக இரு அணிகளின் சம்மதத்துடன் மூன்று சுற்றுக்களாகக் குறைக்கப்பட்டன.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் முதல் சுற்றில் அச்சுவேலி விக்னேஸ்வரா வி.கழகம் 25-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கழகம் 25-20 என்ற புள்ளியடிப்படையில வென்றது.

இதனால், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக இடம்பெற்ற மூன்றாவது சுற்றில் 25-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆவரங்கால் இந்து விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

இறுதியில் 2-1 என்ற அடிப்படையில் ஆவரங்கால் இந்து விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

இப்போட்டியின மூன்றாம் இடத்தை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பெற்றது.

முதலாம் இடத்தைப்பெற்ற அணிக்கு 4ஆயிரம் ரூபா பணப்பரிசும் 2ஆம் இடத்தைப் பெற்ற அணிக்கு 3ஆயிரம் ரூபாவும், 3ஆம் இடத்தைப் பெற்ற அணிக்கு 2ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

போட்டியின் சிறந்த விளையாட்டு வீரராக அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழத்தைச் சேர்ந்த க. வேணுகோபான தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த கழகமாக காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் தெரிவு செய்யப்பட்டது.

(ஐ-5-86)

## பெங்களூர் போட்டியில் கங்குலி, கும்ப்ளே

பெங்களூரில் 12ஆம் திகதி நடைபெறும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் கங்குலி, கும்ப்ளே ஆகியோர் இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் இதுவரை கங்குலி ஆடவில்லை. இப்போட்டிக்கு திராவிட் தலைவராக இருந்து வருகிறார். வலது தொடையில் ஏற்பட்ட கட்டியால் 2 முறை சத்திர சிகிச்சை செய்ததால் கங்குலி இந்தப் போட்டியில் ஆட முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கங்குலியின் உடல் தகுதிநிலை பெற்று இருக்கிறார். சுழற்பந்து வீச்சாளர் கும்ப்ளேயின் தந்தை இறந்ததால் கட்டாக்கில் கடந்த ஆறாம் திகதி நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் கும்ப்ளே இடம்பெறவில்லை. அவருக்கு பதிலாக சாய்ராஜ் பஹீதுலே அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

3 நாடுகள் கிரிக்கெட் போட்டியின் 8ஆவது ஆட்டம் பெங்களூர் சின்னசாமி அரங்கில் வருகின்ற 12 ஆம் திகதி புதன்கிழமை பகல் - இரவாக நடைபெறுகிறது. இதில் இந்திய - ஆஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. இந்த போட்டிக்கான இந்திய அணியில் காயம் அடைந்துள்ள கங்குலி மற்றும் கும்ப்ளே ஆகியோர் இடம்பெறுவார்கள் என்று இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ். கே.நாயர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பாக். சுற்றுலாவிலிருந்து விலகுவதற்கு நியூஸிலாந்து வீரர்களுக்கு அனுமதி

இஸ்லாமாபாத்,நவ.10

இம்மாதம் இறுதியில் நடைபெறவுள்ள பாகிஸ்தான் சுற்றுலாவிலிருந்து நியூஸிலாந்து வீரர்கள் விலகுவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகள் பங்குபற்றவுள்ளன.

எனினும், பாதுகாப்பு அச்சுறுத்தல காரணமாக இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கு நியூஸிலாந்து வீரர்கள் மறுப்பு தெரிவிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இந்தியாவில் போட்டிகளில் பங்குபற்றிவரும் நியூஸிலாந்து வீரர்கள் சிலரும் பாகிஸ்தானுக்குச் செல்வதற்குத் தயக்கம் காட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வீரர்கள், அதிகாரிகள் எவரேனும் இச்சுற்றுலாவில் பங்குபற்றாமலிருக்கவிரும்பினால், அதற்கு அனுமதி வழங்கப்படும். பங்குபற்றாதோருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது என 'நியூஸிலாந்து கிரிக்கெட்' தெரிவித்துள்ளது.

கடந்த வருடமே மாதம் கராச்சியில் நடைபெற்ற குண்டு வெடிப்பையடுத்து, நியூஸிலாந்து அணி பாகிஸ்தான் சுற்றுலாவை ரத்துச் செய்துவிட்டு தாயகம் திரும்பியது.

இதற்கு மாற்றீடாகவே தற்போது ஒருநாள் தொடரில் விளையாடுவதற்கு நியூஸிலாந்து சம்மதித்துள்ளது. இத்தொடரிலிருந்து கராச்சி நகரம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 04 - 08 - 1925



உதிர்வு 11 - 10 - 2003

### அமரர் நவரத்தினம் புவனேஸ்வரி

அன்பையெல்லாம் சொரிந்து எம்மை
அரவணைத்து வழிநடத்திய எமது
குடும்பத்திபத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

- மகள்,
பேரப்பிள்ளைகள்.

நாகநாதன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (24568) (36-14-17)

# மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி தெட்சனாமூர்த்தி
**(சந்திர மூர்த்தி)**

புங்குடுதீவு, ஊரைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக கொண்ட இளையதம்பி தெட்சனாமூர்த்தி அவர்கள் நேற்று (09.11.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி (முன்னாள் மனோன்மணி விலாஸ் உரிமையாளர் - மன்னார்) அன்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் ஜெகதீஸ்வரமூர்த்தி (மன்னார்), வரலெட்சுமி (கனடா), நடேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்பமலர், நாகராசா (கனடா), சறோ (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுப்பிரமணியம் (கனடா), இராமநாதன் (V.R.M.&Co, கொழும்பு) ஆகியோரின் அன்பு மருமகனும் இந்திரகுமார் ஜெயமலர், ஜெயமாலா, ஜசிந்தா, ரஜீவன், ஜெனனி ஆகியோரின் பெரியப்பாவும் கனிஸ்ராவின் பேரனும் ஜெயதீபன் (கனடா), தினேஸ்குமார் (கனடா), சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2003) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேரதீவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.ஜெகதீஸ்வரன் (தம்பி).

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (24572) (31-14-17)

### தம்பையா சின்னத்துரை

அச்சுவேலி, இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சின்னத்துரை அவர்கள் நேற்று (09.11.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும் தங்கவேல, சந்திரசேகரம், கந்தசாமி, பொன்மணிதேவி, சக்திவேல் (U.K), வேல்முருகன், ரவிந்திரன், நவரத்தினம், சிவகுமார் (ஜேர்மனி), நந்தகுமாரன் (சுவிஸ), தவக்குமார்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணிதேவி, காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் சர்வேஸ்வரி, ஜெயகுமரபதி (நகரசபை - பருத்தித்துறை), தியாகேஸ்வரி (U.K.), அன்னலட்சுமி, சிவநாயகி, குலராணி, சிவரூபி (ஜேர்மனி), சண்முகானந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தவசீலன், சத்தியசீலன், தேவசீலன், அருள்செல்வி, கலைச்செல்வி, துவாரகன், கோகுலன், இராகுலன், துவாரகன், துஸ்யந்த் (H.N.D.E.), தர்சிகா, கிருசாந்திகா, தர்மிகா, சர்மிகா, சாந (U.K.), சாருஜன, ஆருபன், நிவேதிகா, தேனுஜா, ரவிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-11-2003) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இடைக்காடு சாமித்திடல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ஜெயகுமரபதி
( மருமகன்)

"மணிமகாநி"
இடைக்காடு, அச்சுவேலி.

THE ROYAL COLLGE of JAFFNA
"SPOKEN ENGLISH" 6 மாத காலப் பயிற்சி By: விக்னேஸ்வரன் ஆச்சாரி (10 வருட அனுபவம்) பிரிவில் கூடியது 15மாணவர்கள். மாதக்கட்டணம் 150/=
426 (302). K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக்வீதி, சங்கானை. (24566) (33)

## தவறிவிட்டது

கைதடி, நவபுரத்தைச் சேர்ந்த இராசலிங்கம் மதிவர்மன் என்பவருடைய தேசிய அ.அ(இல.801122086V), தனது தாயாரின் வைத்தியச் செலவுக்கென கொண்டுசென்ற ஒரு தொகைப் பணம் என்பன கடந்த 08.11.2003 சனிக்கிழமை கைதடி நவபுரத்துக்கும் நாவற்குழி உணவுக் களஞ்சியத்துக்கும் இடையில் தவறவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் மனிதாபிமான ரீதியாக ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- இ.மதிவர்மன்.
கைதடி நவபுரம், கைதடி. (245640)

ராஜா யாழ்ப்பாணம்
விக்ரம், சூர்யா, லைலா, சிம்ரன் நடித்த
தூள்மகன்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.) (C-29904) (30)

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த
திவான்



காட்சி நேரம்: 3.00, 7.00. (C/30854) (12)
புதன் முதல்
பிரசாந்த், ஷாலினி நடித்த
பிரியாத வரம் வேண்டும்

நாகம்ஸ் சுன்னாகம்
3ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த
திருமலை



தினசரி காட்சிகள் : 11.00 3.00 7.00 (பி.நே.) (C/31060)(12)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், தேவயானி நடித்த
ஒருவன் (சீனஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
AMERICAN BEAUTY

# மரண அறிவித்தல்கள்

### சிவகுரு சிவரத்தினம்
**(கிளை முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)**

ஈவினையைப் பிறப்பிடமாகக்கொண்ட சிவகுரு சிவரத்தினம் நேற்று (09-11-2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் விசுவலிங்கம் - காலஞ்சென்ற நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் சிவசக்தியின் பாசமிகு கணவரும் விநோத், டினுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, தவஞானம், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவகுமார், சுரேஸ்குமார், சசிகுமார், சந்திரகுமார், கஜேந்தினி, பிரதீபன், தர்சிகா, கிருத்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், குணரத்தினம், அன்னபூரணம் (ஆசிரியை, யாழ்.புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை), ஜெகதீஸ்வரன், சாந்தினி, திருநாதசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜதுசாயினியின் பெரிய தந்தையும் செல்லையா செல்வரத்தினம் (ஜே.பி., ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற சரஸ்வதியம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் செல்வகுமாரி (லண்டன்), செல்வகுமார் (லண்டன்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகலனும் பௌசிகா, கயாளினி, சயிதா, அச்சுதன், காஞ்சனா, பிரகாஸ், பிரசன்னா ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-11-2003) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஈவினை விலங்கன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவசக்தி (மனைவி).
வினோத், டினுஷா (பிள்ளைகள்).

ஈவினை. (24573) (14-12-17)

### திருமதி விமலாதேவி சர்வேஸ்வர சர்மா

யாழ். ஓட்டுமடம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது திருகோணமலையை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி விமலாதேவி சர்வேஸ்வரசர்மா அவர்கள் நேற்று (09-11-2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சர்வேஸ்வர சர்மாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாத்தளை சர்வேஸ்வரக் குருக்கள், காரைநகர் ரகுநாத சர்மா, திருமதி தேவமணி கனகசபாபதி ஐயர், தேயோவதி கணேசரத்தின சர்மா, பத்மாவதி சோமகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நீலாம்பிகை, பத்மநாப சர்மா, சாரதாதேவி சோமஸ்கந்த சர்மா, சுப்பிரமணிய சர்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருகோணமலையில் அவரது இல்லத்தில் இன்று (10-11-2003) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சுரேந்திர சர்மா(பெறாமகன்)

T.P.: 026 222 22098
திருகோணமலை. (24571) (32-14-17-12)

### செல்லத்துரை செல்வநாயகம்

பூநகரியைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வநாயகம் அவர்கள் 08.11.2003 சனிக்கிழமை புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மதிவதனி (மனைவி).

5ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (சி-31221) (31-12-14-17)

### வல்லிபுரம் நவரத்தினம்
**(ஓய்வுபெற்ற லிகிதர் கச்சேரி)**

துரையப்பா வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல. 37/1, கச்சேரி நல்லூர் றோட், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நவரத்தினம் அவர்கள் நேற்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை சுண்டுக்குளியில் காலமானார்.

அன்னார் திருத்தணிகையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி) அன்புக் கணவரும் நவதர்சினி, நவரஜனி (ஆசிரியை, கொழும்பு பற்றியா பாடசாலை), உதயனி (வெளிக்கள உத்தியோகத்தர்-சாந்தியகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கருணாகரன் (ஆசிரியர், நாவற்குழி மகா வித்தியாலயம்), மேவின் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.11.2003 திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

இல. 37/1, கச்சேரி நல்லூர் றோட்,
சுண்டுக்குளி. (24574) (32-12-14-17)

# பொய்களை பொழிந்து தள்ளுகிறார் ஜனாதிபதி

# முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.9

முப்படைகளின் பிரதம தளபதி என்ற முறையில் பாதுகாப்பு அமைச்சின் அனைத்து விடயங்களும் ஜனாதிபதியின் அங்கீகாரத்துடனும் ஆலோசனையுடனுமே செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. அரசாங்கத்தின்மீது சேறு பூச வேண்டும் என்ற நோக்குடனேயே ஜனாதிபதி உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார்.

- இவ்வாறு ஜனாதிபதியை சாடியுள்ளார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மாரப்பன ஜனாதிபதியின் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சை முற்றாகப் பொறுப்பேற்றபின் முன்னுக்கு பின் முரணான - அர்த்தமற்ற - குற்றச்சாட்டுகளை சுமத்தி, பிரதமர்மீதும், என்மீதும், அரசாங்கத்தின்மீதும் அபகீர்த்தியை ஏற்படுத்த முனைகின்றார்.

புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த ஆறு கப்பல்களைத் தடுக்க வேண்டாம் என பிரதமரும், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் நானும் கடற்படையினருக்குக் கட்டளை பிறப்பித்தோம் என்று ஜனாதிபதி கூறுகின்றார். இது ஜனாதிபதியின் கற்பனை. இப்படியான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை. இது கடற்படைத் தளபதிக்கும் தெரியும்.

அதேவேளை, ஆயுதம் ஏற்றி வந்த மூன்று கப்பல்களைக் கடற்படையினர் தடுத்து அழித்து ஒழித்துள்ளனர் என்பதே உண்மை.

இலங்கைக் கடற்பிரதேசத்திற்குள் எந்த ஒரு நடமாட்டத்தையும் அனுமதிக்கக்கூடாது என கடற்படையினருக்கு நான் கடுமையான உத்தரவைப் பிறப்பித்தேன். அதைக் கடற்படையினர் இன்றும் கடைப்பிடித்தே வருகின்றனர்.

சமாதான ஒப்பந்தத்தின் பின் புலிகள் பல பாரிய முகாம்கள் அமைத்துள்ளனர் என்று கூறுகின்றார் ஜனாதிபதி.

திருகோணமலையில் குரங்குபாஞ்சான்குளம் முகாமைத்தவிர வேறு புதிய முகாம்கள் எவற்றையும் புலிகள் அமைக்கவில்லை. இந்த முகாம்கூட தற்காலிகமாக அமைக்கப்பட்டது. கிடுகுகளால் உருவாக்கப்பட்டது. வேறு இடங்களில் அதாவது, முன்பு யுத்தகளத்தில் இருந்த புலிகள் இங்கு வந்துள்ளதால், மேலதிக இருப்பிட வசதிக்காகவே இந்த முகாம்கள் புலிகளால் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, திருகோணமலைத் துறைமுகத்திற்குத் தெற்கே ஆறு மைல்களுக்கு அப்பால் புலிகளின் இராணுவமுகாம் ஒன்று உள்ளது.

1995ஆம் ஆண்டு புலிகள் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்திய போது அங்கு இராணுவத்தை அனுப்புவதற்காக இங்கிருந்த இராணுவம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. இதனால், புலிகள் இப்பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமித்துக்கொண்டனர்.

புலிகளின் இந்த முகாமில் - நமது இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட பலம்மிக்க ஆட்லறிகள் இருக்கின்றன என்று எமக்கு தகவல் கிடைத்தது. இதனால், திருகோணமலைத் துறைமுகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனை, பாதுகாப்புச் சபையில் ஜனாதிபதியிடம் கூறியதோடு, நாடாளுமன்றத்திலும் பகிரங்கமாக நான் அறிவித்துள்ளேன்.

திருமலைத் துறைமுகத்தின் மீது புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினால் அதனை முறியடிக்கும் வகையில் பாதுகாப்பை நாம் பலப்படுத்தி வைத்திருக்கிறோம். இது ஜனாதிபதிக்கும் தெரியும்.

மற்றுமொரு புதுமையான குற்றச்சாட்டையும் ஜனாதிபதி முன்வைத்துள்ளார். அதாவது, படையினருக்குத் தேவையான வெடிமருந்துகள் மற்றும் ரவைகள் என்பன இல்லை. அவை ஒரு மாதத்திற்குக் கூடபோதுமானவை இல்லை என்கிறார் ஜனாதிபதி..

நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதல் யுத்தம் நடைபெறவில்லை. முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி பொறுப்பில் இருந்த போது, கையிருப்பில் வைத்திருந்த வெடிமருந்துகளும் குண்டுகளும் தோட்டாக்களும் அப்படியே இப்போதும் இருக்கின்றன. மேலதிகமாகப் பயிற்சிக்காக மேலதிகமான ஆயுதங்களை நாம் இறக்குமதி செய்துள்ளோம். இந்த உண்மையை ஜனாதிபதி தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கின்றார்.

ஜனாதிபதி எம்மோடு நின்றுவிடவில்லை. கண்காணிப்புக் குழுவினர் மீது குற்றம் சுமத்துகின்றார்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும். மக்களை அங்கு மீளக்குடியேற்ற வேண்டும். தமக்கென தனியான கடற்படை ஒன்றை நிறுவ அனுமதிக்க வேண்டும் என்று புலிகள்தான் கோரிக்கை விடுத்தனர்.



புலிகளின் இந்தக் கோரிக்கைகளை கண்காணிப்புக் குழுவினர் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தனர்.

ஆனால், இத்தகைய விடயங்களை கண்காணிப்புக் குழுவினர் அரசுக்கு சிபாரசு செய்தனர் என்று ஜனாதிபதி குற்றஞ்சாட்டுகிறார். இது உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டாகும்.

மொத்தத்தில் அரசின் மீது சேறு பூச வேண்டும் என்றே திட்டமிட்டு ஜனாதிபதி குற்றஞ்சுமத்துகின்றார். ஜனாதிபதியின் இக்குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிக்கின்றேன்.

- இப்படி அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார். (ஐ-9)

## புலிகளின் தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதெல்லாம் இந்த அரசு என்னை எந்த அளவுக்கு மோசமாக இழிவுபடுத்தியது என்பதைப் பேசிக்கொண்டே போகலாம். அதற்கு முடிவே இருக்காது. அமைச்சரவைக் கூட்டங்களில் என்னை படுமோசமாக நடத்தினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தொலைக்காட்சியில் என்னை இழிவுபடுத்தியதை எடுத்துக்கொண்டால் நீலப் படங்களைக் காண்பிக்கும் தொலைக்காட்சியை தவிர்த்து வேறு தொலைக்காட்சியில் எந்த ஒரு பெண்ணையும் இழிவுபடுத்தாத அளவுக்கு அரசுத் தொலைக்காட்சியும் சரி, பிரதமரின் நெருங்கிய உறவினருக்கு சொந்தமான தொலைக்காட்சியும் சரி என்னை மோசமாக இழிவுபடுத்தி இருந்தன.

பிரதமரால் முன்மொழியப்பட்ட ஒருவருக்கு நான் பாதுகாப்பு விடயத்தில் அதிகாரத்தைத் தற்காலிகமாக மட்டுமே வழங்கினேன். அதுவும் தயக்கத்தோடுதான் அதைச்செய்தேன்.

கடந்த ஆண்டு, பிரதமர் விடுதலைப் புலிகளோடு ஏற்படுத்திக் கொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்டப்படி செல்லுபடியாகாது. ஏனெனில், நான் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை.

★ கேள்வி:- அப்படியாயின் ஏன் அந்த ஒப்பந்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்க தாங்கள் உடன்படவேண்டும்?

★ ஜனாதிபதி:- நான் அதில் மறுபடியும் கையெழுத்திட்டுக் கொள்ளலாம் என்பதால்தான் அப்படிச் செய்தேன்.

சமாதான நடவடிக்கைகளில் புலிகள் சிரத்தையாக - உண்மையாக ஈடுபாட்டோடு - இருக்கிறார்களா என்பதில் எனக்குச் சந்தேகங்கள் உண்டு. புலிகள் அமைதியை விரும்புகிறார்கள்தான். ஆனால், அந்த அமைதியோடு தனிநாடும் வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.

அண்மையில் அவர்கள் சமர்ப்பித்த திட்டப் பிரேரணைகளைப் பார்க்கும் போது இதை நன்றாக புரிந்துகொள்ள முடிகிறது.

புலிகள் என்னைப் படுகொலை செய்ய முயற்சித்தவர்கள் என்பது அவர்களுடனான சமாதானப் பேச்சுகளில் ஒரு பிரச்சினையாக இருக்கப் போவதில்லை.

புலிகளின் தலைவரை நான் என்றுமே ஒரு நல்ல நண்பராகக் கருதாமல் இருக்கலாம் ஆனால், அவரது அடக்குமுறையின் கீழ் வாழும் பல லட்சக்கணக்கான தமிழ் மக்களின் நலனுக்காக நான் அவரோடு பேசவும், செயற்படவும் தயார்.

- இப்படி ஜனாதிபதி அப்பேட்டியில் கூறினார். (ஐ-9)

## கத்திக்குத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லம் அது என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது. படைமுகாமில் இருந்து வெளியே சென்றிருந்த பிரஸ்தாப சிப்பாய் நேற்றுமுன்தினம் முதல் காணாமல் போயிருந்தார்.

நேற்றுப்பகல் பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து இவரது சடலம் புதையுண்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது. (ஐ)

## சட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகலவிதமான துன்புறுத்தல் நடவடிக்கைகளை நிறுத்தவும் குறிப்பாக பொதுச்சொத்துக்களையும் மக்களின் உடைமைகளையும் பாதுகாக்கவும் செயற்படுமாறு பலகல்ல தனது ஆலோசனையில் குறிப்பிட்டிருக்கிறார்.

போர்நிறுத்த ஒப்பந்தப்படி செயற்பட்டு நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் தேசிய பாதுகாப்பையும் காப்பாற்றுமாறு அவர் இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களிலுள்ள தளபதிகளுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

## பொதுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பறிக்க முயன்றார்.

எனது அதிகாரங்களைக் கைபவிக்கும் பத்திரங்களில் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சரும் பல குறுக்கு வழிகளில், நேர்மையற்ற விதத்தில் எனது கையொப்பத்தைப் பெற பல தடவைகள் முயன்றனர்.

தேசிய நல்லிணக்க அரசு தீர்வை நான் கூறியிருக்கிறேன். அது குறித்து என்ன செய்வது என்பதை பிரதமரே இப்பொழுது தீர்மானிக்கவேண்டும்.

நிதியமைச்சை நான் பொறுப்பேற்கப் போகிறேன் என்று கூறுவது வதந்தியாகும். அது குறித்து நான் இன்னமும் சிந்திக்கக்கூடவில்லை.

- இவ்வாறு அவர் செவ்வியல் கூறினார். (ஐ-9)

## வெள்ளவத்தையில் கடத்தல் முயற்சி குற்றத்தடுப்பு பிரிவால் முறியடிப்பு!

வெள்ளவத்தையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கடத்தல் முயற்சி ஒன்றைப் பொலிஸார் முறியடித்துள்ளனர். கடத்தல் கோஷ்டியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18 லட்சம் ரூபாவைக் கப்பமாகக் கோரி, நபரொருவரை வாகனத்தில் கடத்திச் சென்ற கோஷ்டியினரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 3.15 மணி அளவில் குறித்த நபர் வாகனமொன்றில் கடத்தப்பட்டிருக்கிறார் என்று அவசர பொலீஸ் சேவைக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

உடனடியாக செயலில் இறங்கிய அவசர பொலிஸ் பிரிவினர் கொழும்பு நகரில் கடமையில் இருந்த அனைத்து அவசர பொலீஸ் வாகனங்களுக்கும் இத்தகவலை அறிவித்தனர். சோதனைச் சாவடிகளுக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டது.

குறித்த வாகனத்தை டபிள்யூ ஏ.சில்வா மாவத்தை வீதியில் மடக்கிப் பிடித்த பொலீஸார், கடத்தப்பட்டவரை மீட்டதுடன் நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

விசாரணைக்காக சந்தேக நபர்கள் வெள்ளவத்தை குற்றத் தடுப்புக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலீஸ் அத்தியட்சகர் எச்.எம்.டி.எச்.ஹேரத் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதியே புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் மாநாட்டிலேயே அவர் இவற்றைக் கூறினார்.

பிரதமர் நாட்டில் இல்லாத வேளையில் ஜனாதிபதி தன்னிச்சையாக பாதுகாப்பு, உள்நுறை, ஊடகம் ஆகிய மூன்று அமைச்சுகளையும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சமாதான முயற்சிகளுக்குப் பாதுகாப்பும் ஊடகமும் இன்றியமையாதவை. கடந்த 21 மாத காலமாக இவை அனைத்தும் அரசின் பொறுப்பிலேயே இருந்தன. அவை சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டன.

ஆனால், இப்பொழுது ஜனாதிபதி அவற்றைக் கைகளில் எடுத்துக் கொண்டு நாட்டு மக்களையே திசை திருப்புகின்றார்.

இப்படியான ஒரு நிலையில் இரண்டு தலைமைகள் ஒரு தீர்வைக் காண முடியாது என்பது உறுதியாகி விட்டது.

**உலக நாடுகள் சந்தேகம்**

இதுவரை காலமும் விடுதலைப் புலிகளுடன் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் சமாதான பேச்சுக்களை நடத்தினோம். இதனால், நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்தில் இலங்கையின் அபிவிருத்திக்காக கோடி கோடியாக பொருளாதார உதவிகளும் கிடைத்துள்ளன. ஆனால், இப்போது சர்வதேச சமூகம் சந்தேகக் கண்கொண்டு பார்க்க ஆரம்பித்துவிட்டது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 21 மாதங்கள் பூர்த்தியாகின்றன. இவ்வளவு காலம் எதையுமே பேசாத ஜனாதிபதி, இப்போது யுத்தநிறுத்த ஒப்பந்தமே சட்டவிரோதமானது, செல்லுபடியாகாது என்கிறார். எனவே, நாட்டு மக்களின் அமைதி, சமாதானம் இப்போது கேள்விக்குறியாகிவிட்டது.

இதற்கெல்லாம் விடைகாண்பது நாடாளுமன்றம் ஒன்றே. நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி சபாநாயகரிடம் கேட்டுள்ளோம். சபாநாயகர் இன்று காலை நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தவுள்ளார். இக்கூட்டத்தில் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டும்படி நாம் வலியுறுத்துவோம். இப்பொழுது சபையில் எமக்கு 130 அங்கத்தவர்களின் ஆதரவு உண்டு.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் கூறினார். இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் திலக் மாரப்பனவும் கலந்துகொண்டார். (ஐ-9)


நீங்கள் விண்ணப்பித்து விட்டீர்களா?

IIS IIS IIS IIS IIS IIS IIS



கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்திட்டம் -2004

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பமுடிவு திகதி : 15/11/2003

டிசம்பரில் O/L பரீட்சையும் ஏப்ரலில் A/L பரீட்சையும் எடுக்கவிருக்கும் மாணவர்களே!

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு, IIS இன் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

IIS

புலமைப்பரிசில் திட்டம் 2004

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி - 15.11.2003

விண்ணப்பப் படிவங்களை IIS அலுவலகங்களிலும் நாடு நாட்டுள் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

வடமராட்சி, யாழ். - கொழும்பு
பயணிகள் வான் சேவை
நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=
ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, தொ.இ. 021 226 3500
JEYA COMMUNICATION, COLOMBO-13
Tel:01-2478444, 01-2478443, 0777-271478
லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்

எமது நேற்றைய வீடியோ CD வெளியீடுகள்
★ ஒற்றன்
★ திருமலை
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(24569) (33)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.